ISSN 1391-9504

# விஜய்

Vijey විජය්

13.07.2011 - மலர் 08, இதழ் 19




## தாவர இடப்பெயர்ச்சி

## ஆரம்பகால நாடாளுமன்ற சிம்மாசனப் பிரசங்கம்

## நெல்சன் மண்டேலா தினம்

## குடிசனத் தொகையை கணக்கிடும் விதம்

விலை ரூபா 15/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மன்னன் இராஜாதி இராஜசிங்கன்

மன்னன் கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கனின் பின்னர் இராஜாதி இராஜசிங்கன் மன்னனானார். அவர் தமது சிறு வயதில் தனது சகோதரனுடன் இலங்கையை வந்தடைந்தார். மலைநாட்டு சிங்களவர் போன்று வளர்ந்த இவர், சிங்கள முறைப்படியே கல்வியும் கற்றார். அத்துடன், இவர் நீண்டகாலமாக முடிக்குரிய இளவரசராக பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டார்.

இதன்பின்னர் கி.பி. 1782 இல் இவர் மன்னராக முடிசூட்டப்பட்டார். எனினும், இராஜாதி இராஜசிங்கன் குறித்து திசாவைமார் எவ்வித வெறுப்பும் அடையவில்லை. அவர்களில் பெரும்பாலானோர் மகிழ்ச்சி அடைந்தனர். அதேபோல், மன்னன் நடத்திச் சென்ற சிம்மாசனக் கொள்கையை எவரும் எதிர்க்கவில்லை. ஆனால், நிலமேக்களிடம் காணப்பட்ட போட்டி பொறாமையே அன்றிருந்த ஒரே ஒரு பிரச்சினையாக இருந்தது. நாயக்கர் வம்சத்தைச் சேர்ந்தவர்கள் தொடர்ந்து ஆட்சி அதிகாரத்தில் இருக்கும்வரை 'அதிகாரம்' எனும் பதவியை வகிப்பவர் மிக உயர்ந்த பதவியை வகிப்பவராகவும் சிரேஷ்ட பிரஜையாகவும் மதிக்கப்பட்டார். பாக்கு வர்த்தகத்தினால் இந்த பதவி பொருளாதார ரீதியிலும் மிகவும் சக்தி வாய்ந்ததாகக் கருதப்பட்டது. பல வரப்பிரசாதங்கள் நிறைந்ததாகவும் விளங்கியது.

இதற்கிடையில் ஒல்லாந்த கிழக்கிந்திய வர்த்தக சங்கமும் பல பிரச்சினைகளை எதிர்நோக்கியது. பக்கச்சார்பற்ற நாடுகளின் கப்பல்களை நடுக்கடலில் சோதனையிடும் நடவடிக்கை குறித்து அன்று அமெரிக்காவிற்கும் ஒல்லாந்திற்கும் இடையில் சண்டைகள் மூண்டன. அப்பொழுது குடியேற்ற ஆங்கிலேயர்களால் ஒல்லாந்து ஆக்கிரமிப்பிற்கு உள்ளாகியது. அதனால், பாதுகாப்புப் படைகளை பலப்படுத்த வேண்டிய தேவை இருந்தது. எனினும், அத்தகைய குடியேற்றங்களில் இருந்த இராஜதந்திரங்களுக்கும் அரச கொள்கைகளுக்கும் ஏற்ப நடக்க வேண்டிய கட்டாயமும் இருந்தது. அதனால், ஒல்லாந்த கிழக்கிந்திய சங்கத்திற்கு தமக்கே உரித்தான படைச் சேனைகளை வழங்கி தமக்குரிய பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்வதற்கான செலவை தாங்கிக்கொள்ள முடியாமல் இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் உலக சனத்தொகை 10.1 பில்லியனாக உயரும்

இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் உலக சனத்தொகை 10.1 பில்லியனாக உயரும் என எதிர்பார்க்கப்படுவதாக அண்மையில் ஐக்கிய நாடுகள் சபையால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆபிரிக்கா, ஆசியா, ஓஷ்யானியா மற்றும் லத்தீன் அமெரிக்கா ஆகிய கண்டங்களில் உயர் இனவிருத்தியுள்ள 58 நாடுகள் காரணமாகவே உலக சனத்தொகை அதிகரிக்கும் நிலை தோன்றியுள்ளதாக அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்த அறிக்கை ஐக்கிய நாடுகள் பொருளாதார மற்றும் சமூக விவகார திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டதாகும்.

ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார மற்றும் சமூக விவகார திணைக்களத்தின் சனத்தொகைப் பிரிவு பணிப்பாளர் ஹஸினா ஸலோட்னிக் இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில்: ''உலகிலுள்ள ஏழை நாடுகளிலேயே இந்த மக்கள் தொகை அதிகரித்திருக்கிறது என்பது முக்கியத்துவமிக்கதாகிறது'' என்றார். புதிய மதிப்பீடுகளின்படி, உலக சனத்தொகை 2023 ஆம் ஆண்டுக்குள் 8 பில்லியனை தாண்டுவதுடன் 2041 ஆம் ஆண்டுக்குள் 9 பில்லியனாகவும் 2081 ஆம் ஆண்டின் பின்னர் 10 பில்லியனாகவும் உயரவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# உ/தரத்தில் விஞ்ஞானம் கற்கும் மாணவர்களின் தொகை அதிகரிக்கப்படும்

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு



க.பொ.த. உயர் தர விஞ்ஞானப் பிரிவில் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கையை நூறு வீதமாக அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

தற்போதளவில், க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களில் உயர் தரத்தில் விஞ்ஞானப் பிரிவில் சுமார் 22சதவீத மாணவர்களே கற்கின்றனர். எனினும், இந்த அளவினை 40சதவீதம் வரை அதிகரிப்பதற்கு எதிர்பார்ப்பதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, எதிர்வரும் 2016 ஆம் ஆண்டளவில் விஞ்ஞானப் பிரிவில் உயர் தரம் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை 40சதவீதம் வரை அதிகரித்திருக்கும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கணினி விஞ்ஞான பட்டதாரிகள் 1000 பேருக்கு ஆசிரிய நியமனம்



கணினி விஞ்ஞான பட்டதாரிகள் 1000 பேரை ஆசிரிய சேவையில் இணைத்துக்கொள்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த ஆசிரியர்கள் மாகாண சபை மட்ட அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

ஆசிரியர் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்டதன் பின்னர், அவர்களுக்கு ருவன்புர கல்வியியல் கல்லூரியில் விசேட பயிற்சிகள் வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தெரிவுசெய்யப்பட்ட 50 பாடசாலைகளுக்கு விரைவில் கணினிக்கூடத்தை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# சகல பல்கலைக்கழகங்களிலும் வெளிநாட்டு அனுமதிப் பிரிவு

இலங்கை பல்கலைக்கழகங்களில் வெளிநாட்டு மாணவர்களை அனுமதித்துக்கொள்ளும் பொருட்டு, சகல பல்கலைக்கழகங்களிலும் 'வெளிநாட்டு அனுமதிப் பிரிவு' ஒன்றை நிறுவுவதற்கு உயர் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

கட்டணம் செலுத்தி இந்நாட்டுப் பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பு கற்கைநெறிகளுக்காக வெளிநாட்டு மாணவர்களை வரவழைத்தல், அவர்களில் தகைமைகள் குறித்து ஆராய்தல், கட்டணம் அறவிடல் மற்றும் அந்த மாணவர்களை அனுமதித்துக் கொண்டதன் பின்னர் ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வினைப் பெற்றுக் கொடுத்தல் போன்ற நடவடிக்கைகள் இந்தப் பிரிவின்கீழ் கொண்டுவரப்படவுள்ளதாக உயர் கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த



நவரத்ன தெரிவித்துள்ளார்.

இது தவிர, கல்வி அமைச்சு மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு என்பனவற்றிலும் 'வெளிநாட்டு அனுமதி' எனும் பெயரில் வெவ்வேறு பிரிவுகள் நிறுவப்படவுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் ஒக்டோபர் மாதமளவில் பல்கலைக்கழக புதிய கல்வி ஆண்டு ஆரம்பிக்கப்படவுள்ளதோடு, அதன்போது சுமார் 1,000 வெளிநாட்டு மாணவர்களை இலங்கை பல்கலைக்கழகங்களில் அனுமதித்துக்கொள்வதற்குத் திட்டமிட்டுள்ளதாக அறியக்கிடைக்கின்றது.

## க.பொ.த.உ/தரப் பரீட்சை:

# 2013 ஆம் ஆண்டிலிருந்து புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாகவே நடைபெறும்



2013 ஆம் ஆண்டிலிருந்து புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாகவே, க.பொ.த. உயர் தரப் பரீட்சைகள் நடைபெறும் என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி, அடுத்த வருடத்தில் பழைய மற்றும் புதிய பாடத்திட்டங்களின் அடிப்படையில் இப்பரீட்சைகள் நடைபெறும் எனவும் 2013 ஆம் ஆண்டிலிருந்து புதிய பாடத்திட்டத்தின் அடிப்படையில் மாத்திரமே மேற்படி பரீட்சைகள் நடைபெறும் எனவும் பரீட்சைகள் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

Vijey விஜய
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

# நைட்டிங்கேல் பறவையினம் அழிவடைந்து வருகின்றதாம்...!



பறவைகளில் மிகவும் அரிய பறவையினம்தான் நைட்டிங்கேல் (Nightingale). இப்பறவையினம் வசீகர குரல் கொண்டதோடு, அழகிய தோற்றத்தையும் கொண்டுள்ளது.இந்த அரிய பறவையினம் அழியும் தருவாயில் உள்ளதாகவும் இன்னும் 30 ஆண்டுகளில் இது இருந்ததற்கான அடையாளமே இல்லாமல் போய்விடும் அபாயம் உள்ளதாகவும் பறவையின ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றை அடுத்தே இத்தகவல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த 40 ஆண்டுகளில் நைட்டிங்கேல் பறவை இனம் 90 சதவீதம் அழிந்துவிட்டது. காடுகள் அழிக்கப்படுவதும் அதன் விளைவாக சுற்றுச்சூழல் மாசுபடுவதும் இதன் அழிவிற்கான முக்கிய காரணங்களாக உள்ளன. இது தவிர, மன்ட்ஜாக் எனப்படும் காட்டு மான்கள் நைட்டிங்கேலின் கூடுகளை அழித்துவிடுகின்றன. இதனாலும் இப்பறவைகள் பாதிப்புக்குள்ளாகின்றன என்று ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர். நைட்டிங்கேல் பறவைகளைப் பாதுகாக்கும் நோக்கில் அமைப்பு ஒன்றும் தற்போதளவில் உருவாக்கப்பட்டுள்ளது. இலங்கை, சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளில் இருந்து கடந்த 1925 ஆம் ஆண்டளவில் இங்கிலாந்துக்கு இடம்பெயர்ந்த பறவையினமாகவே நைட்டிங்கேல் பறவையினம் கருதப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிம்மாசனப் பிரசங்க சம்பிரதாயம்

*1972 ஆம் ஆண்டு குடியரசு யாப்பு நிறைவேற்றப்படுவதற்கு முன் அக்காலத்தில் பதவி வகித்த தேசாதிபதி அவர்களால் ஆற்றப்படும் சிம்மாசனப் பிரசங்கத்துடனேயே நாடாளுமன்றத்தின் கூட்டத்தொடர் ஆரம்பமாகியது. 1972 ஆம் ஆண்டு முதலாம் குடியரசு யாப்பு நடைமுறைக்கு வருவதற்கு முன் 1947 ஆம் ஆண்டு அமுலில் வந்த சோல்பரி அரசியல் யாப்பு நடைமுறையில் இருந்தது. அந்த அரசியல் யாப்பின்படி, மகா தேசாதிபதி அவர்கள் நாடாளுமன்றத்தின் சபை மண்டபத்திற்கு வருகைதந்து சிம்மாசனப் பிரசங்கத்தை நடத்துவது முக்கியமான சம்பிரதாயமாக கருதப்பட்டது*

ஒவ்வொரு நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னரும் புதிய அரசாங்கத்தின் கொள்கைகளையும் எதிர்காலத்தில் அப்புதிய அரசு மேற்கொள்ள உத்தேசித்துள்ள செயற்றிட்டங்களையும் விரிவாக எடுத்துச் சொல்லும் 'சிம்மாசனப் பிரசங்கம்' மிக முக்கியமானதாகும். அக்கால அரசியலமைப்பின்படி, புதிய நாடாளுமன்றத்தின் முதல் கூட்டத் தொடரின்போது, ஆற்றப்படும் 'சிம்மாசனப் பிரசங்கம்' மிக முக்கியத்துவம் வாய்ந்தமையால் அதனைக் கேட்பதற்காக லட்சக்கணக்கான மக்கள் பழைய நாடாளுமன்றக் கட்டடத்தின் முன்னால் (தற்போதைய காலிமுகத்திடல் அருகில்) கூடுவார்கள்.

சோல்பரி அரசியல் யாப்பு முடிவுக்கு வந்ததும், இந்த சிம்மாசனப் பிரசங்க முறையும் நீங்கியது. ஆங்கிலேயரின் காலனித்துவ யுகத்தின் ஆரம்பம் முதல் நடைமுறையில் இருந்த இச்சம்பிரதாயத்தின்படி, நாடாளுமன்ற சபை மண்டபத்தில் இருந்து இறுதியாக சிம்மாசனப் பிரசங்கத்தை நிகழ்த்தியவர் சேர். ஹென்றி மோன்க் மேசன் மூவர் எனும் ஆள்பதியாவார். அக்காலத்தில் எமது நாட்டின் ஆள்பதியானவர் இங்கிலாந்தின் மாமன்னர் அல்லது மகாராணியின் பிரதிநிதியாகவே வீற்றிருந்தார். சோல்பரி யாப்பு அமுலுக்கு வந்தபின் இப்பதவி 'தேசாதிபதி' என்ற பெயரில் அழைக்கப்பட்டது.

## சபையின் கூட்டத்தொடர் ஆரம்பம்

காலனித்துவ யுகத்தில் இருந்ததைவிட, சோல்பரி யாப்பு நடைமுறைக்கு வந்ததோடு, சிம்மாசனப் பிரசங்க சம்பிரதாயத்தில் பெரும் மாற்றங்கள் நிகழ்ந்தன. இதன்படி, கூட்டத் தொடரை ஆரம்பிக்கும் அரசாங்க நிகழ்வு காலிமுகத்திடல் அருகில் உள்ள நாடாளுமன்ற சபை கட்டடத்திற்கு முன் உள்ள சபை மண்டபத்தில் நடத்தும் புதிய சம்பிரதாயம் ஆரம்பமாகியது. காலிமுகத்திடலுக்கருகில் உள்ள இந்நாடாளுமன்றக் கட்டடம் தற்பொழுது ஜனாதிபதி செயலகமாகத் திகழ்கின்றது. சபையின் பிரதான வாயிலைத் திறந்தால் இச்சபை மண்டபம் காட்சியளிக்கும். சபையின் கூட்டத் தொடர் ஆரம்ப விழாவில் அச்சபையில் தேசாதிபதிக்காக விசேட ஆசனம் ஒதுக்கப்பட்டிருக்கும்.





## வெளிநாட்டு அரச தலைவர்களுக்காக....

அமைச்சர்களின் ஆசனங்களுக்கு பின் பிரதி அமைச்சர்கள், அமைச்சர்களின் செயலாளர்களுக்காக ஆசனங்கள் ஒதுக்கப்படும். அதன்பின் தேர்ந்தெடுக்கப்பட்ட வேறு உயர் அதிகாரிகளுக்கும் இலங்கையில் உள்ள வெளிநாட்டு தூதுவர்களுக்காகவும் ஒதுக்கப்பட்டது. ஒரு சில சந்தர்ப்பங்களில் சிம்மாசனப் பிரசங்க நிகழ்வில் கலந்துகொள்வதற்காக, வெளிநாட்டுத் தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. அதன்படி, ஒரு முறை அப்போதைய இந்தியப் பிரதமராக இருந்த ஸ்ரீ ஜவஹர்லால் நேரு அவர்கள் சிம்மாசனப் பிரசங்கத்தில் கலந்துகொண்டார்.

## சிம்மாசனப் பிரசங்கம்

அமைச்சரவை அங்கத்தவர்கள் உள்ளிட்ட ஜனப்பிரதிநிதிகள் சபை மற்றும் செனட் சபை ஆகிய இரு சபைகளின் பிரதிநிதிகளும் விசேட அழைப்பின்பேரில் வருகைதந்த பிரமுகர்களும் உரிய ஆசனங்களில் அமர்ந்தபின் தேசாதிபதி 'அரச இல்லத்தில்' (கொழும்பு கோட்டையிலுள்ள பிரதான அஞ்சல் அலுவலகத்தின் முன்னால் செல்லும் பாதையின் மறுபக்கத்தில் இன்றும் செயற்படும் ஒரு மாபெரும் மாளிகையாகும்) அல்லது தேசாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் இருந்து வெளியேறி சம்பிரதாய அரச ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு விழா மண்டபத்திற்கு குறித்த நேரத்தில் வருகைதந்து அவருக்கென ஒதுக்கப்பட்ட ஆசனத்தில் அமர்வார். அதன்பின், எழுத்துமூலமான சிம்மாசனப் பிரசங்கத்தை நிகழ்த்துவார்.

நடந்து முடிந்த கூட்டத்தொடரில் (ஒரு கூட்டத்தொடரினை ஓர் அமர்வு என்றும் அழைப்பர்) தமது அரசால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் புதிய அமர்வில் மேற்கொள்ள எதிர்பார்த்திருக்கும் திட்டங்களும் சிம்மாசனப் பிரசங்கத்தில் வெளிப்படுத்தப்படும். சோல்பரி அரசியலமைப்பில் நடைமுறைப்படுத்தப்பட்ட இச்சம்பிரதாயத்தின்படி, நாடாளுமன்றத்தின் முன்னுள்ள சபை மண்டபத்தில் முதலாவது சிம்மாசனப் பிரசங்கத்தை நடத்திய இலங்கை தேசாதிபதி என்ற பெருமையை சேர்.ஒலிவர் குணதிலக பெறுகிறார். அதேவேளை, இச்சம்பிரதாயத்தின் அடிப்படையில் நிகழ்ந்த இறுதி தேர்தலுக்குப் பின் 1970 இல் நடந்த இறுதி சிம்மாசனப் பிரசங்கத்தை நடத்தியவர் அப்போதைய தேசாதிபதியாகிய வில்லியம் கொபல்லாவ அவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

1972 ஆம் ஆண்டு இலங்கை அரசியலமைப்பு அல்லது 'குடியரசு யாப்பு' நடைமுறைக்கு வந்ததோடு, இந்த 'சிம்மாசனப் பிரசங்க' முறை ஒழிந்தது. அதற்குப் பதிலாக பிரதமர், சபை ஆற்றும் 'கொள்கை வெளியீடு' எனும் புதிய சம்பிரதாயம் உருவாகியது. குடியரசு யாப்பின்படி, அதிகாரபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 'தேசிய அரசப் பேரவை' 1972 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 6 ஆம் திகதி முதன்முதலாக கூடியது. அத்தோடு, இதுவரை காலமும் நாம நிர்வாகியாக இருந்த தேசாதிபதிக்குப் பதிலாக குடியரசு யாப்பின் ஜனாதிபதி என்ற பதவி உருவானது. எனினும், ஜனாதிபதியின் அதிகாரம் அதன்பின் நடைமுறைக்கு வந்த 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பில் உள்ளதுபோல் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி பதவியாக இருக்கவில்லை. அதுவும் 1947 ஆம் ஆண்டு யாப்பின்படி, தேசாதிபதி வகித்த 'நாம நிர்வாகி' என்ற நிலையே 1972 ஆம் ஆண்டு யாப்பின்படி ஜனாதிபதிக்கும் இருந்தது.

## கொள்கை வெளியீடு

1972 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 6ஆம் நாள் புதிய யாப்பின்படி, முதன்முதலாக கூடிய தேசிய அரசப்பேரவை (நாடாளுமன்றம் 1972 ஆம் ஆண்டு யாப்பின்படி, அவ்வாறே அழைக்கப்பட்டது) கூட்டத்தில் அப்போதைய பிரதமர் சிரிமாவோ பண்டாரநாயக்க புதிய சம்பிரதாயத்தை ஆரம்பித்து வைத்து பின்வருமாறு அறிக்கை ஒன்றை வெளியிட்டார். "இன்றைக்கு சுமார் இரண்டு வருடங்களுக்கு முன் நடைபெற்ற பொதுத்தேர்தலில் தெரிவுசெய்யப்பட்டபின், அப்போதைய நடைமுறையிலிருந்த மரபுகளின்படி, தேசாதிபதியை அழைத்து சிம்மாசனப் பிரசங்கம் நடத்தப்பட்டது. அதனைப் பின்பற்றி புதிய அரசியலமைப்பில் ஜனாதிபதியை அழைத்து எமது அரசின் கொள்கை பிரகடனத்தை வெளியிட நாம் விரும்பவில்லை. அத்தகைய மரபினைக் கடைப்பிடிக்க வேண்டிய தேவை இருப்பதாக நாம் கருதவில்லை. எனவே, அரசாங்கத்திற்காக கொள்கைப் பிரகடனத்தை நான் வாசிக்க விரும்புகிறேன்". இது அன்றைய தேசிய அரசப் பேரவையாக இருந்த காலிமுகத்திடல் பழைய நாடாளுமன்ற கட்டடத்திலேயே நிகழ்ந்தது.

(அ)

*'காலனித்துவ யுகத்தில் இருந்ததைவிட, சோல்பரி யாப்பு நடைமுறைக்கு வந்ததோடு, சிம்மாசனப் பிரசங்க சம்பிரதாயத்தில் பெரும் மாற்றங்கள் நிகழ்ந்தன. இதன்படி கூட்டத்தொடரை ஆரம்பிக்கும் அரச நிகழ்வு காலிமுகத்திடல் அருகில் உள்ள நாடாளுமன்ற கட்டடத்திற்கு முன் உள்ள சபை மண்டபத்தில் நடத்தும் புதிய மரபு ஆரம்பமாகியது. காலிமுகத்திடலுக்கருகில் உள்ள இந்நாடாளுமன்றக் கட்டடம் தற்பொழுது ஜனாதிபதி செயலகமாக திகழ்கின்றது. சபையின் பிரதான வாயிலைத் திறந்தால் இச்சபை மண்டபம் காட்சியளிக்கும்'*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி

## முகாமைத்துவம் - 63

### கற்றலுக்கான ஆலோசனைகள்

# மாணவர்கள் தம்மை மதிப்பிடுதல் அவசியம்

**மாணவர்கள் தமது கல்விப் பயணத்தின்போது, தம்மைத் தாமே மதிப்பிடுதல் அவசியம். இம்மதிப்பீட்டைச் செய்வதால் தம்மை மேலும் அபிவிருத்தியடையச் செய்யலாம். மாணவர்கள் தங்கள் அறிவை மேம்படுத்தவே பாடசாலையில், வீடுகளில், பிரத்தியேக வகுப்புக்களில் கல்வி கற்கிறார்கள்**





நாம் கல்வியில் எந்த நிலையில் இருக்கின்றோம்?, எமது கல்விச் செயற்பாட்டை இன்னும் சிறப்பாகச் செய்ய என்ன செய்யலாம்?, அதற்குத் தடையாக இருக்கும் அம்சங்கள் யாவை?, அவற்றை எவ்வாறு அகற்றலாம்? போன்ற வினாக்களுக்கான விடைகளைச் செயற்படுத்த உதவும் கருவியே 'மதிப்பிடுதல்' ஆகும்.



### தம்மை மதிப்பிடுவதற்கான வழிமுறைகள் சில....



◆ ஒவ்வொரு மாணவரும் கற்றவற்றை நினைவில் வைத்திருக்கின்றனரா? என்பதை அறிவதற்கான சிறந்த சாதனமாக வினாக்கள் திகழ்கின்றன. எனவே, வினாக்களுக்கு விடையளிப்பதன் மூலமாக, மாணவர்களின் அறிவு மட்டத்தை மதிப்பிட்டுக்கொள்ளலாம்.

◆ பாடசாலைகளில் மாணவர்களை மதிப்பிடவே ஒப்படைகள், மாதாந்தப் பரீட்சைகள், தவணைப் பரீட்சைகள் போன்றன நடாத்தப்படுகின்றன. இச்செயன்முறைகளில் ஒவ்வொரு மாணவரும் கட்டாயம் பங்குபற்ற வேண்டும்.

◆ பரீட்சைகளுக்குத் தோற்றுவதால் புள்ளிகள் வழங்கப்படும். சிலவேளைகளில், ஏதேனுமொரு பாடத்தில் குறைவான புள்ளிகள் பெற்றால், அதை நிவர்த்தி செய்யும் சந்தர்ப்பத்தை பரீட்சைகளே ஏற்படுத்திக் கொடுக்கின்றன. ஆகவே, தங்களது நிலைகளை மேலும் மெருகூட்டவும் மதிப்பீடு செய்யவும் பரீட்சைகள் உதவி புரிகின்றன.

◆ கடந்தகால வினாக்களுக்கு சுயமாக விடையளிப்பதனூடாக அல்லது எழுதிப் பார்ப்பதனூடாக, கல்வியில் மாணவர்கள் தம்முடைய நிலையை மதிப்பீடு செய்துகொள்ள முடியும்.



◆ கல்வியில் நான் சிறந்த அறிவுள்ள மாணவராக இருக்கின்றேனா? அல்லது அறிவுப் பற்றாக்குறையுடன் இருக்கின்றேனா? என்று மாணவர்களுக்கு சிலவேளைகளில் சந்தேகம் ஏற்படலாம். ஆகவே, தமது நிலை தொடர்பாக, ஆசிரியரிடம் தனியாகக் கேட்டு அதற்கான ஆலோசனைகளைப் பெற்று, அதன்படி செயற்பட வேண்டும். அத்துடன், ஒவ்வொருவரும் தம்மை மதிப்பிட்டுக்கொள்ள எப்போதும் அதிக புள்ளிகளை எடுக்கும் மாணவரோடு, தம்மை ஒப்பிட்டு-மதிப்பீடு செய்ய வேண்டும்.

ஆகவே, மதிப்பீடு செய்வதென்பது, எமக்குத் தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்துவதாகவோ அல்லது தற்பெருமைகொள்ளச் செய்வதாகவோ இருக்காது. மாறாக, நாம் மேலும் மேலும் முன்னேறக் களம் அமைத்துத் தருவதாகவே அது அமைந்திருக்கின்றது.

(தொடரும்)

**எம்.ஏ.எஃப்.சப்ரானா**

---


## துஷாரா கலைவட்டம் - 2011

## எக்ரோன் அகில இலங்கை சித்திரப் போட்டி

**(இலங்கையில் 15 பிரிவுகளின் கீழ் நடத்தப்படுகின்ற ஒரேயொரு மிகப்பிரமாண்டமான சித்திரப்போட்டி)**

எக்ரோன் நிறுவனத்தின் பிரதான அனுசரணையுடனும் விஜய், விஜய, மிவிந்து பத்திரிகைகளின் ஊடக அனுசரணையுடனும் துஷாரா கலைவட்டத்தினால் அகில இலங்கை ரீதியில் சித்திரப் போட்டி நடத்தப்படுகின்றது. வெற்றி பெறுபவர்களுக்கு சான்றிதழ்களுடன் பெறுமதி வாய்ந்த பரிசுகளும் வழங்கப்படும். மேற்படி போட்டி தொடர்பான விபரங்களும் நிபந்தனைகளும் கீழே தரப்பட்டுள்ளன.

**போட்டி விதிமுறைகள்**

- அளவு - அங்குலம் 14×18 அளவு
- வர்ணம் - சோக் (வர்ணப்பூச்சு), ஒயில் பெயின்ட், போஸ்டர் பெயின்ட், வோட்டர் கலர்ஸ் ஆகியவைவற்றில் விரும்பியதைப் பயன்படுத்தலாம்.
- தலைப்பு - எந்வொரு தலைப்பிலும் சித்திரங்களை வரையலாம்.
- ஒருவர் ஆகக்கூடியதாக 5 சித்திரங்களை அனுப்பி வைக்கலாம்.
- பிரிஸில் போர்ட், கென்வஸ் துணி, ட்ரொயிங் பேப்பர் இவற்றில் விருப்பமான ஒன்றில் சித்திரத்தை வரையலாம்.

**போட்டிப் பிரிவுகள்**

- முன்பள்ளி மாணவர்கள் (5 வயதிற்குக் கீழானோர்)
- பாடசாலை மட்டத்தில் - தரம் 1 தொடக்கம் தரம் 13 வரையில் (13 பிரிவுகள்)
- பகிரங்க போட்டிப் பிரிவு - பல்கலைக்கழக மாணவர்கள் அல்லது வேறு எவரும் (18 வயதிற்குக் மேல்)

நீங்கள் இந்தப் போட்டியில் Acron தயாரிப்பான எந்தவொரு வர்ணத்தையும் (சோக், வோட்டர் கலர்ஸ், போஸ்டர் கலர், ஒயில் பெயின்ட்) பயன்படுத்தினீர்களாயின் அவற்றின் அட்டைப் பெட்டியில் காணப்படும் வெள்ளை நிற லேபிளை சித்திரத்தின் பின்புறம் ஒட்டி அனுப்பவும். கண்காட்சிக்கென தெரிவு செய்யப்படாத 2500 சித்திரங்களுக்குரிய சான்றிதழ்கள் தபாலில் அனுப்பி வைக்கப்படும். Acron குறியீட்டு இலச்சினை ஒட்டப்பட்டுள்ள சித்திரங்கள் மட்டுமே போட்டிக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

| பரிசுத் தெரிவுகள் ( அகில இலங்கை) | | |
|---|---|---|
| முதலாவது இடத்தைப் பெறும் 15 பேர் | ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக (தரம் 1 முதல் தரம் 13 வரை) | கிண்ணம், தங்கப்பதக்கம், பரிசு, சான்றிதழ் |
| இரண்டாவது இடத்தைப் பெறும் 15 பேர் | தெரிவிற்கு ஒருவர் வீதமாக | கிண்ணம்,வெள்ளிப்பதக்கம், பரிசு, சான்றிதழ் |
| மூன்றாவது இடத்தைப் பெறும் 15 பேர் | பிரிவுக்கு ஒருவர் வீதமாக | கிண்ணம், வெண்கலப் பதக்கம், பரிசு, சான்றிதழ் |
| Acron ஒயில் பெயின்ட் 15 போட்டியாளர்கள் | ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதம் | கிண்ணம், தங்கப்பதக்கம், பரிசு, சான்றிதழ் |
| Acron அதிவிசேட வெற்றியாளர்கள் 15 | ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக | கிண்ணம், தங்கப்பதக்கம், பரிசு, சான்றிதழ் |
| Acron விசேட வெற்றியாளர்கள் 150 | ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக | தங்கப்பதக்கம், பரிசு, சான்றிதழ் |
| Acron சான்றிதழ் பெறுவோர் 400 | ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக | விருது, சான்றிதழ் |
| திறமைச்சான்றிதழ் 2000 | ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக | விருது, சான்றிதழ் |

Acron லேபிள் ஒட்டப்பட்ட 100 சித்திரங்களை அனுப்பச் செய்கின்ற ஆசிரிய, ஆசிரியைமாருக்கு நினைவுச் சான்றிதழும் ஊக்குவிப்புச் சான்றிதழும் வழங்கப்படும்.
(இதற்கென குறிப்பிட்ட 100 சித்திரங்களுடன் ஆசிரியர்/ஆசிரியையின் பெயர், முகவரி, வீட்டு முகவரி, தொலைபேசி இலக்கம் ஆகியனவற்றைக் குறிப்பிடல் வேண்டும்)
சர்வதேச மட்டத்திலும் தேசிய மட்டத்திலுமான நடுவர்களாலேயே வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவர். நடுவர்களின் தீர்ப்பே இறுதி முடிவாகும்.
வெற்றியாளர்களுக்கு தனிப்பட்ட ரீதியில் அறிவிக்கப்படுவதுடன், 'விஜய்' பத்திரிகையிலும் தொலைக்காட்சி, வானொலி மூலமும் அறிவிக்கப்படும். கண்காட்சிக்கென தெரிவு செய்யப்படுகின்ற 2500 சித்திரங்களும் கண்காட்சிக்கு வைக்கப்படுவதுடன் குறித்த 2500 சித்திரங்களுக்கான பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

**போட்டி முடிவுத்திகதி 2011 ஜூலை 15.**

**முகவரி:** துஷாரா கலைவட்டம், இலக்கம் - 16/19, பிங்ஹேன, பன்னிப்பிட்டி.
அல்லது கலர் கிராஃப்ட் லங்கா, 119, பெங்க்ஷால் வீதி, கொழும்பு-11.

**தொடர்புகளுக்கு** - 011 4962520, 0714483704.

## துஷாரா கலைவட்டம்
## THUSHARA KALA KAVAYA

அகில இலங்கை சித்திரப் போட்டி-2011

Acron All Island Art Competition

விண்ணப்பப்படிவம் Application Form

போட்டியாளரின் பெயர்:
Applicant's Name :

முன்பள்ளி/பாடசாலை/
பல்கலைக்கழகம்/பகிரங்க :
Pre School, Schools, University & Open Category :

பிறந்த திகதி:
Date of Birth :

ஆண்/பெண் Sex : ஆண் Male ☐ பெண் Female ☐

வீட்டு முகவரி:
Personal Address :

தொலைபேசி இல:
Telephone :

வகுப்பு:
Grade :

சித்திரத்தின் தலைப்பு:
Topic :

பாவித்துள்ள வர்ணம்:
Medium of Expression
Oil, Water color, Poster CLR, Pastels :

.................................. போட்டியாளரின் கையொப்பம் Applicant's Signature

.................................. திகதி Date

.................................. பெற்றோர்/பாதுகாவலர் கையொப்பம் Parents/ Guardians Signature

Acron

சித்திரக்கலையின் பேரபிமானம் பெற்ற முதன்மையாளர்களான துஷாரா கலைவட்ட அமைப்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாட்டின் குடிசனத்

இலங்கையின் பதினான்காவது குடிசன, வீட்டு வசதிகள் தொகை மதிப்பீடு இப்போது ஆரம்பமாகிவிட்டது. கடந்த ஏப்ரல் மாத முதல் வாரத்தில் இதனை ஆரம்பித்தனர். பொதுவாக, இலங்கை உட்பட, பெரும்பாலான நாடுகளில் குடிசன மதிப்பீட்டை பத்து வருடங்களுக்கு ஒரு முறையே மேற்கொள்கின்றனர். இலங்கையில் சட்டப்படி, உத்தியோகபூர்வமாக முதன்முதலாக குடிசன மதிப்பீடு மேற்கொள்ளப் பட்டது 1871 மார்ச் மாதம் 27 ஆம் திகதியாகும். அதன்பின் முறையே 1881, 1891, 1901, 1911, 1921, 1931, 1946, 1953, 1963, 1971, 1981 ஆகிய ஆண்டுகளில் முழு நாட்டையும் உள்ளடக்கிய குடிசன மதிப்பீடு நடத்தப்பட்டது. 1991 ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டை நடத்த முடியவில்லை. 2001 ஆம் ஆண்டில் நடைபெற்ற குடிசன மதிப்பீட்டில் நாட்டிலுள்ள 25 மொத்த நிர்வாக மாவட்டங்களில் ஆக 18 மாவட்டங்களில் மாத்திரமே குடிசன மதிப்பீட்டை நடத்தக்கூடியதாக இருந்தது. மீண்டும் முழு நாட்டையும் உள்ளடக்கக்கூடிய விதமாக நடத்தப்படும் இக்குடிசன மதிப்பீட்டில் மக்களின் வாழ்வாதாரத்தை முறையாகத் திட்டமிடுவதற்குத் தேவையான தகவல்களை பெறுவது மிக முக்கியமானதாகும்.

மதிப்பீடு என்பதன் அர்த்தம் சில விடயங்களை சேர்த்துக்கொள்வதாகும். பொதுவாக, உத்தியோகபூர்வமாக எமது நாட்டில் குடிசன மதிப்பீட்டை நடத்துவது சனத்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் ஆகும். கணக்கெடுப்பு வகைகளும் பல உண்டு. குடிசன மற்றும் வீட்டுத்தொகை மதிப்பீடு அதில் ஒன்றாகும். இந்த வருடம் குடிசன மற்றும் வீட்டுத்தொகை மதிப்பீடே நிகழ்கின்றது. அத்தகைய சந்தர்ப்பத்தில் ஒருவர்கூட விடுபடாமலும் யாராவது ஒருவர் இருமுறை கணக்கிடப்படாமலும் மதிப்பீடு செய்வது மிகவும் முக்கியமானதாகும்.

## மதிப்பீட்டை மேற்கொள்ளும் விதம்

*** கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கான வரைபடத்தைத் தயாரித்தல்:**

குடிசன மற்றும் வீட்டு மதிப்பு கணக்கெடுப்பை மூன்று படிமுறைகளில் மேற்கொள்வர். கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கான வரைபடத்தைத் தயாரித்தல் முதற் படிமுறை ஆகும். இந்த முதற் படிமுறையில் முழு இலங்கையில் இருக்கும் சகல கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும் வரைபடத்தில் உள்ளடக்கப்படும். குடிசன மதிப்பீட்டை மேற்கொள்ளும் போது மதிப்பீட்டு அதிகாரிகள் கட்டடங்களுக்கும் வீடுகளுக்கும் செல்வது இந்த வரைபடத்தை அடிப்படையாக வைத்தே ஆகும்.




தொகை மதிப்பீட்டு இலக்கச் சீட்டு

## கட்டடங்களை பட்டியலிடுதல்

இம்மதிப்பீட்டின் இரண்டாம் கட்டம் கட்டடங்களை பட்டியலிடுதலாகும். அடுத்த கட்டமாக மேற்கொள்ள இருக்கும் தொகை மதிப்பீட்டிற்கு தேவையான ஒரு சட்டத்தை (Frame) அதாவது வடிவத்தைத் தயாரித்துக்கொள்வதே கட்டடங்களைப் பட்டியலிடும்போது மேற்கொள்ளும் நடவடிக்கையாகும். இந்த நடவடிக்கையை மேற்கொள்வது கிராம உத்தியோகத்தரின் கடமையாகும். இதற்கான பயிற்சிகள் அவர்களுக்கு உரிய முறையில் வழங்கப்பட்டுள்ளது.

கிராம உத்தியோகத்தர் தனது கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள சகல கட்டடங்களையும் பட்டியலில் சேர்ப்பார். இக்கட்டடங்கள் மூன்று வகைப்படும்.

## இல்ல அலகு

இல்ல அலகு எனப்படுவது மக்கள் வாழும் கட்டடங்களாகும். அதாவது, சாதாரணமாக குடும்பம் ஒன்றின் வசிப்பிடமாகும்.

## சமூக வாசஸ்தலம்

சமூக வாசஸ்தலம் அல்லது இல்லம் அல்லாத வாசஸ்தலம் என்பது இல்லம் அல்லாத ஆனால் மனிதர்கள் வாழும் ஒரு வசிப்பிடமாகும். சிறிய தங்கும் விடுதிகள், முதியோர் இல்லங்கள் போன்றவை இதற்கு தக்க உதாரணமாகும்.

## குடியிருப்பு அல்லாத அலகு

வர்த்தக நிலையங்கள், அலுவலகங்கள் போன்றவற்றை இதற்கு சிறந்த உதாரணமாகக் கொள்ளலாம். தமது கடமைகளின் போது மாத்திரமே இத்தகைய இடங்களில் மனிதர்கள் இருப்பர்.

மேற்குறித்த விபரங்களுக்கு மேலதிகமாக கட்டட உரிமையாளர், வீட்டின் பிரதான குடியிருப்பாளர், முகவரி, வீட்டில் எத்தனை பேர் வசிக்கின்றனர் போன்ற தகவல்கள் திரட்டப்படும். விபரங்கள் திரட்டப்படும் சகல கட்டடங்களுக்கும் கிராம உத்தியோகத்தரால் இலக்கத்துடன்கூடிய செந்நிற தொகை மதிப்பீட்டு இலக்கச் சீட்டு ஒன்று கட்டடத்தின் பிரதான வாயில் சட்டத்தில் ஒட்டப்படும். நாடுபூராவும் கட்டடங்களை கணிப்பிடும்போது, அது குறித்து நாட்டு மக்களுக்கு ஊடகங்கள் மூலம் அறிவிக்கப்படும். ஏதாவதொரு காரணத்தால் தாம் வசிக்கும் இடத்தின் தொகை மதிப்பீட்டு இலக்கச் சீட்டு ஒட்டப்படாமல் இருந்தால் அது குறித்து அப்பிரதேச கிராம உத்தியோகத்தருக்கு அறிவிக்க வேண்டும்.



## தொகை மதிப்பீட்டுப் பிரிவுகள்

தொகை மதிப்பீட்டை இலகுவாகவும் சரியாகவும் மேற்கொள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் சிறிய தொகை மதிப்பீட்டுப் பிரிவுகளாக வகுக்கப்படும். ஒரு தொகை மதிப்பீட்டுப் பிரிவுக்குள் 150 கட்டடங்கள் மாத்திரம் இருக்கும். ஒவ்வொரு பிரிவுக்குமான தகவல்களைச் சேகரிக்க சுமார் ஒருமாத காலத்திற்கு தொகை மதிப்பீட்டை மேற்கொள்ளும் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படுவர். இலங்கையில் தொகை மதிப்பீட்டு பிரிவுகள் ஏறக்குறைய 65,000 அளவு இருப்பதாகவும் அதற்காக கணிப்பீட்டு உத்தியாகத்தர்கள் 65,000 பேர் சேர்க்கப்படவுள்ளனர். பிரதேச செயலாளர் தலைமையிலேயே இதற்கான உத்தியோகத்தர் தெரிவு நடைபெறும்.

## தொகை கணக்கெடுப்பின்போது...

தொகை மதிப்பீட்டின்போது, மக்கள் குடியிருக்கும் சகல கட்டடங்களுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தொகையை கணக்கிடும் விதம்



அவ்வவ் பிரதேசங்களில் தெரிவு செய்து நியமிக்கப்பட்ட தொகை மதிப்பீட்டு உத்தியோகத்தர்கள் வருகை தந்து அந்த பிரிவில் வசிக்கும் ஒவ்வொருவர் குறித்த தகவல்களையும் திரட்டுவர்

✱ திறந்தவெளியில் வாழ்பவர்களின் பொதுவான வசிப்பிடத்தை இனங்கண்டு அவர்கள் குறித்த தகவல்களை முதல்நாள் அதாவது, குடிசன மதிப்பீட்டுத் தினத்திற்கு முந்திய தின இரவு மேற்கொள்ளப்படும்.

✱ தொகை மதிப்பீட்டு தினத்திற்கு பின் வரும் இரு தினங்களுக்குள் மக்கள் வசிப்பிடங்களுக்குச் சென்று தகவல்களை சேகரித்து சகல கட்டடங்களுக்கும் மீண்டும் சென்று தொகை மதிப்பீட்டின் நேரத்தில் அந்த இடத்தில் இருப்பவர்கள் குறித்து விசாரிக்கப்படும்.

✱ இங்கு வழமையாக வாழ்வோர் தொகை கணக்கிடும் வேளையில் அந்த இடத்தில் அவர் இருக்கிறாரா? இல்லையா? என்பதனை கணக்காளர் அவதானிப்பர். வழமையாக அங்கு வாழாத வேறு யாராவது ஓர் உறவினர் அல்லது விருந்தினர், கணக்கிடும் வேளையில் அந்த இடத்தில் அல்லது வீட்டில் தங்கி இருந்தால் அந்த நபர் குறித்த முழுத் தகவல்களையும் குறிக்க வேண்டிவரும்.

✱ மேலும் தொகை மதிப்பீட்டுத் தகவல்களை சேகரித்தலுக்கும் தொகை மதிப்பீட்டு வேளைக்கும் இடையில் உள்ள காலகட்டத்தில் அந்த பிரிவில் குழந்தை ஒன்று பிறந்தால் அது குறித்த தகவல்களை புதிதாக சேர்த்துக்கொள்ள வேண்டும். அதேபோல், அவ்வேளையில் மரணம் ஒன்று சம்பவித்தால் அந்த நபரை நீக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## ஜனாதிபதியின் பணிப்பு

தொகை மதிப்பீட்டை மேற்கொள்வதற்காக, ஜனாதிபதி அவர்களால் குடிசன மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்திற்கு பணிப்புரை ஒன்று விடுக்கவேண்டும். ஏனைய நடவடிக்கைகள் அப்பணிப்புரையின் பேரிலேயே ஆரம்பமாகும். ஆரம்ப நடவடிக்கையாக குடிசன மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் மேற்கொள்வது தொழில் நுட்ப உதவிகளை வழங்குவதோடு, ஆலோசனைகளையும் வழங்குவதாகும். மாவட்ட நிர்வாக மையமே தொகை மதிப்பீட்டின்போது, நிர்வாக கடமைகளைச் செய்கின்றது. தொகை மதிப்பீட்டின்போது, மாவட்ட அரசாங்க அதிபர் அதாவது, மாவட்டச் செயலாளர் வர்த்தமானி அறிவித்தல்மூலம் தொகை மதிப்பீட்டு ஆணையாளராக நியமிக்கப் படுவார். அவர் இந்நாட்களில் தொகை மதிப்பீட்டு ஆணையாளராகவே பணி புரிவார். அதேபோல் பிரதேச செயலாளர்கள் வர்த்தமானி அறிவித்தல்மூலம் பிரதித் தொகை மதிப்பீட்டு ஆணையாளராக செயற்படுவார்கள். இதன்படி, முழுத்தொகை மதிப்பீட்டு நிர்வாக கடமைகள் மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் பிரதேச செயலாளர்கள் மூலமே மேற்கொள்ளப்படும்.

## குடிசன மதிப்பீட்டை மேற்கொள்வதன் நோக்கம்

✱ ஒரு நாட்டின் மக்கள் வாழ்க்கையை திட்டமிடுவதற்கு தொகை மதிப்பீடு மிக அவசியமாகும். அத்தோடு, ஒவ்வொரு தனி மனிதனதும் தகவல்களை சேகரிக்கும் ஒரே வழி குடிசன மதிப்பீடு மாத்திரமே.

✱ குடிசன மற்றும் வீட்டுத்தொகை மதிப்பீட்டின் அடிப்படை நோக்கம் நாட்டின் கொள்கை வகுப்பு மற்றும் திட்டமிடலுக்கான தகவல்களை திரட்டுவதே ஆகும்.

✱ தொகை மதிப்பீடானது, தேசிய மட்டத்தில் இருந்து கிராம உத்தியோகத்தர் பிரிவு போன்ற மிகச் சிறிய நிர்வாகப் பிரிவு வரை பெறமுடியும். தரவுகளைப் பயன்படுத்துவோர் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களுக்கும் தமக்கு அவசியமான வேறு தேவைகளுக்கும் புள்ளிவிபரத் தரவுகளைப் பயன்படுத்த முடியும்.

✱ நிர்வாக நடவடிக்கைகளுக்கும், சனத்தொகை அதிகரிப்பு, திட்டமிடல், எதிர்கால அதிகரிப்பு போன்றவற்றிற்கான முன்கூட்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் விஞ்ஞான மற்றும் சமூக பொருளாதார ரீதியான ஆய்வுகளுக்கும் குடிசன மதிப்பீட்டுத் தகவல்கள் பயன்படுகின்றன.

✱ குடிசன மற்றும் வீட்டுத்தொகை மதிப்பீட்டு பட்டியலை தயாரிக்கும் போது, நபர் ஒருவர் வசிக்கும் சகல கட்டடங்களும் உள்ளடக்கப்படும். குடிசன மற்றும் புள்ளி விபரத் திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் பல்வேறு கணிப்பீடுகளுக்கும் ஆய்வுகளுக்கும் தொகை மதிப்பீட்டின்மூலம் கிடைக்கும் சரியான புள்ளி விபரங்கள் பயன்படும்.

## குடிசன மதிப்பீட்டால் வெளிவரும் தகவல்கள்

✱ குடிசன மதிப்பீட்டின் அடிப்படை நோக்கம் மொத்த சனத்தொகையை கண்டுபிடித்தலாகும். எனினும், அதனை விட வேறு பல தகவல்களையும் திரட்டுகின்றனர். இதன்மூலம் பெறப்படும் தகவல்களை அரச கொள்கைத் திட்டமிடல் பகுதியினரும் உள்நாட்டு வெளிநாட்டு ஆய்வாளர்களும் பல்கலைக்கழக பேராசிரியர்களும், விரிவுரையாளர்களும், பாடசாலை ஆசிரியர்களும் மேலும் பல்வேறு பிரிவினருமாக பெருந்தொகையானோர், பயன்படுத்துகின்றனர்.

குடிசன மதிப்பீட்டில் தனிநபர் விபரம் சேர்க்கையில் வயது, பால், திருமணம் முடித்தவரா? இல்லையா? சமயம், இனம் ஆகிய பிரஜைகளின் சமூகரீதியிலான தகவல்களையும் கல்வி மட்டத்திலும் உள் விவகார தகவல்களையும் ஒன்று சேர்க்கின்றனர்.

✱ தனி நபர் மேற்கொள்ளும் பொருளாதார செயற்பாடுகளை தேடிப்பார்ப்பதற்காக 15 வயதும் அதற்கு மேற்பட்ட சகல நபர்களினதும் கடந்த 12 மாத கால எல்லைக்குள் அவர்கள் மேற்கொண்ட முக்கிய நடவடிக்கைகள் தொடர்பான தகவல்களை சேகரித்தல். தொகை மதிப்பீட்டின்மூலம் தொழில்புரிவோர், வேலையற்றோர் போன்ற விடயங்கள் தொடர்பான புள்ளி விபரங்களையும் திரட்ட முடியும்.

✱ வீட்டுத்தொகை மதிப்பீட்டின் போது, வீடுகளில் மேற்கொள்ளப்படும் சுகாதார மற்றும் ஆரோக்கிய வாழ்விற்கான முறைகள், நீர், ஒளி போன்றவற்றை பெற்றுக்கொள்ளும் விதம், உணவைச் சமைப்பதற்காக பயன்படுத்தப்படும் எரிபொருள் வகை, வீடு கட்டப்பட்ட ஆண்டு மற்றும் வீட்டைக் கட்டப் பயன்படுத்தப்பட்ட கட்டடப் பொருட்கள் அறைகளின் தொகை, அறைகளின் அளவு போன்ற பல்வேறு தகவல்கள் திரட்டப்படும்.

**இரஞ்சித் ஜெயகர்**

## விஞ்ஞானப் புதிர்

✱ மனித உடலில் மார்பறையையும் வயிற்றறையையும் பிரிக்கும் சுவரின் பெயர் என்ன?



உதரவிதானம்.

✱ எலும்பு மண்டலம் என்பது யாது? அதன் பயன் என்ன?

உடலில் அடங்கியுள்ள அனைத்து எலும்புகளையும் மொத்தமாக 'எலும்பு மண்டலம்' என்பர். இவை உடல் உறுப்புகளின் பாதுகாப்பிற்கும், ஆதரவு இயக்கம் ஆகியவற்றிற்கும் பயன்படுகின்றன.



✱ தசைகளின் பயன் யாது?

உடல் உறுப்புகளின் அசைவிற்கும், இயக்கத்திற்கும் இணைப்பிற்கும் இது பயன்படுகிறது.

✱ உணவு 'சமிபாட்டு மண்டலம்' என்பது யாது? அதன் பயன் என்ன?



வாய், தொண்டை, உணவுக்குழல், இரைப்பை, சிறுகுடல், பெருங்குடல், செரிப்பு நீர் சுரப்பிகளும் உணவு 'சமிபாட்டு மண்டலம்' ஆகும். இவை உணவை சமிபாடடைய செய்யவும் உட்கிரகிக்கவும் உதவுகின்றன.

✱ கொதிக்க வைத்த பின்னர் குளிர்ச்சியான நீரில் மீன்கள் உயிர்வாழ முடியாது. அது ஏன்?



நீரைக் கொதிக்கவைக்கும்போது மீன்கள் சுவாசிக்கத் தேவையான ஒட்சிசன் அந்நீரில் இருந்து வெளியேறிவிடுகிறது. எனவே, மீன்கள் உயிர் வாழ முடிவதில்லை.



✱ சளி பிடித்திருக்கும் போது, காது சரியாகக் கேட்பதில்லையே ஏன்?

யூஸ்டேஷியன் எனும் குழாய் சளிப் படலத்தினால் அடைக்கப்படுகிறது. எனவே, செவிப்பறையின் காற்றழுத்தம் இருபுறமும் சமமாக இராது. இது செவிப்பறையின் அதிர்வை பாதிக்கிறது. எனவே, சளி பிடித்திருக்கும்போது காது சரியாகக் கேட்பதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டொமினிகன் குடியரசு




**அரசு:** ஜனநாயக குடியரசு அல்லது பிரதிநிதித்துவ ஜனநாயகத்தைக்கொண்ட பல கட்சிக் குடியரசு.

**சுதந்திரம்:** ஸ்பெய்னிடமிருந்து-1821 டிசம்பர் 01; ஹெய்ட்டியிடமிருந்து-1844 பெப்ரவரி 27; ஸ்பெய்னிடமிருந்து-1865 ஒகஸ்ட் 16.

**தேசிய விடுமுறை தினம்:** சுதந்திர தினமாகிய பெப்ரவரி 27.

**ஜனாதிபதி** (2004): லியோனெல் பெர்ணான்டஸ்.

**உப ஜனாதிபதி** (2004): ரஃபாயல் அல்பர்க்வர்க்.

## புவியியல்

டொமினிகன் குடியரசானது, கரீபியன் கடலில் ஹிஸ்பானியோலா எனும் தீவின் மூன்றில் இரண்டு பகுதி பரப்பளவு நிலத்தைக் கொண்டுள்ளது. டொமினிகன் குடியரசின் மேற்கில் ஹெய்ட்டியும் கிழக்கில் ஹிஸ்பானியோலா தீவின் பியூடோரிக்காவும் மேற்கில் ஜமைக்காவும் எல்லைகளாக அமைந்துள்ளன. நாட்டின் மத்தியிலும் மேற்கிலும் மலைகள் நிறைந்துள்ளதோடு, தென்மேற்கே தாழ்நிலங்கள் அமைந்துள்ளன. என்ரிகியூலோ, இந்நாட்டின் பெரிய ஏரியாகும். யாக் டெல் நோர்ட் எனும் நதி நாட்டின் மிகப்பெரிய நதியாகும். இது தவிர, ஏராளமான சிறிய ஆறுகளும் ஓடைகளும் இங்கு பாய்கின்றன.









தேசிய இலச்சினை

தலைநகரின் ஒரு பகுதி

**மொத்தப்பரப்பு:** 18,815 ச.மைல் (48,730 ச.கி.மீ.).

**நிலப்பரப்பு:** 18,680 ச.மைல் (48,381 ச.கி.மீற்.).

**நிலப்பிரிவுகள்:** 31 மாகாணங்கள்.

**தலைநகரமும் பெரிய நகரமும்** (2003): சென்டோ டொமிங்கோ.

**ஏனைய பெரிய நகரங்கள்:** சந்தியாகோ, டி லொஸ் கபரெலொஸ்.

**உயர் மலைச்சிகரம்:** டுவார்ட் சிகரம் (3,098 மீற்)

**தாழ்மையம்:** என்ரிகியூலோ ஏரி.

**மக்கள் தொகை** (2010): 9,794,487.

**நாணயம்:** டொமினிகன் பெஸோ.

**மொழிகள்:** ஸ்பானிய மொழி.

**இனக்குழுவினர்கள்:** வெள்ளையர் 16%, கறுப்பின மக்கள் 11%, கலப்பின மக்கள் 73%.

**சமயம்:** ரோமன் கத்தோலிக்கம் 95%.

**எழுத்தறிவு** (2003): 85%.

**இணையத்தளக் குறியீடு:** +1-809,+1-829,+1-849.

**தொலைபேசிக் குறியீட்டு இலக்கம்:** .do

**தேசிய கீதம்**

Quisqueyanos valientes, alcemos
Nuestro canto con viva emoción,
Y del mundo a la faz ostentemos
Nuestro invicto glorioso pendón....என ஆரம்பமாகின்றது.

## வரலாறு

1492 ஆம் ஆண்டு இந்நாட்டை கொலம்பஸ் கண்டுபிடித்தார். அவர் அதற்கு 'லா எஸ்பனோலா' எனப் பெயரிட்டதோடு, கொலம்பஸின் மகனாகிய டியாகோ முதலாவது ராஜ பிரதிநிதியாக நியமிக்கப் பட்டார். தலைநகராகிய சென்டோ டொமிங்கோ, 1496 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது. இதுவே மேற்குலகில் ஐரோப்பியர் குடியேறிய மிகப் பழமையான நகராகும்.

தொடர்ந்து ஸ்பானியரின் குடியேற்ற நாடாக விளங்கிய டொமினிகன் குடியரசு, 1795 இல் பிரான்ஸியரின் ஆதிக்கத்தின்கீழ் வந்தது. 1801 இல் ஹெய்ட்டி நாட்டின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. 1808 இல் சென்டோ டொமிங்கோ பொது மக்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டு குடியரசுக்கான முதல் அடி எடுத்து வைக்கப்பட்டது. ஆனால், 1814 -1821 வரை ஸ்பானியர்கள் மீண்டும் தமது காலனித்துவத்தை இங்கு நிலை நாட்டினர். 1822-1844 வரை, ஹெய்ட்டியின் ஆதிக்கம் நிலைநாட்டப்பட்டு, 1844 ஆம் ஆண்டு பெப்ரவரி 27ஆம் திகதி பீட்ரோ சந்தானா தலைமையில் டொமினிகன் குடியரசு உதயமாகியது. எனினும், 1861 முதல் 1865 வரை மீண்டும் ஸ்பானியரின் ஆதிக்கத்தின்கீழ் இருந்தது. 1865 ஒகஸ்ட் 16 ஆம் திகதி ஸ்பெய்னிடம் இருந்து முற்றாக விடுதலை பெற்று டொமினிகன் குடியரசு சுதந்திர அரசாகத் திகழ்ந்தது. எனினும், ஐக்கிய அமெரிக்காவின் தலையீடு அதிகமாகவே காணப்பட்டது. 1930 இல் ராணுவம் மேற்கொண்ட புரட்சியின் பலனாக, ராணுவ ஆட்சி நிலவி, பின்னர் தேர்தல் நடாத்தப்பட்டு ஜனநாயக ஆட்சி மலர்ந்தது.



ஜனாதிபதி



உப ஜனாதிபதி



ஜனாதிபதி மற்றும் உப ஜனாதிபதி வாசஸ்தலங்கள்



யாக் டெல் நோர்ட் நதி



சமானா விரிகுடா

## கலாசாரம்

டொமினிகன் குடியரசு மக்கள் ஸ்பானிய-கரீபியன் கலாசாரத்தையே பின்பற்றுகின்றனர். ஸ்பானிய காலனித்துவ, ஆபிரிக்க அடிமைகள் மற்றும் டெய்னோ பூர்வீகம் ஆகியவற்றின் கலாசாரத் தாக்கங்கள் நாடெங்கிலும் முழுமையாகப் பரவிக்கிடக்கின்றன.





ஒசாமா கோட்டை

## காலநிலை

டொமினிகன் குடியரசானது வெப்பக் காலநிலையைக் கொண்ட ஒரு நாடாகும். வருடத்தில் ஜனவரியும் பெப்ரவரியும் மிகவும் குளிர்ச்சியான மாதங்களாகும். ஆனால், ஒகஸ்ட் மாதம் மிக வெப்பமான மாதமாகும். ஒகஸ்ட், செப்டெம்பர் மற்றும் ஒக்டோபர் மாதங்களில் புயல் காற்று நாட்டைத் தாக்குவதோடு, தென் பிராந்திய கரையோரங்களில் பாரிய சேதங்களை விளைவிக்கும்.

## தொடர்பாடல்

**தொலைபேசிகள்** (2007): பிரதான தொலைபேசிப் பாவனையாளர்கள்: 897,000; செல்லிடத் தொலைபேசிப் பாவனையாளர்கள்: 4.606 மில்லியன். **வானொலி ஒலிபரப்பு நிலையங்கள்:** AM 120, FM 56, SW 4. **தொலைக்காட்சி ஒலிபரப்பு நிலையங்கள்** (1997): 25. **இணையத்தள வழங்குனர்கள்** (2007): 81,218; இணையத்தள பாவனையாளர்கள்: 1,232.



கொலம்பஸ் பூங்கா

## போக்குவரத்து

**புகையிரதப்பாதைகள்** (2006): மொத்தம் 517 கி.மீற்றர்.

**பெருந்தெருக்கள்** (1999): மொத்தம் 12,600 கி.மீற்றர்.

**துறைகளும் துறைமுகங்களும்:** பொக்காச்சிகா, பியூட்டோ பிளாட்டா, ரியோ ஹெய்னா, சென்டோ டொமிங்கோ.

**விமான நிலையங்கள்** (2007): 34.




சென்டோ டொமிங்கோ துறை

## பொருளாதாரம்

**விவசாயம்** (பயிர்ச்செய்கை நிலம் 23%) **மற்றும் விலங்கு வேளாண்மை:** கரும்பு, கோப்பி, பருத்தி, கொக்கோ, புகையிலை, தானியங்கள், வாழை, பண்ணை விலங்குகளும் உற்பத்திப் பொருட்களும். **கைத்தொழில்கள்:** சுற்றுலாத்துறை, சீனி, புடவை, சீமெந்து, புகையிலை. **இயற்கை வளங்கள்:** நிக்கல், பொக்ஸிட், தங்கம், வெள்ளி. **ஏற்றுமதிகள்** (2009): சீனி, கோப்பி, கொக்கோ, புகையிலை,இறைச்சி. **இறக்குமதிகள்** (2009): உணவுப் பொருட்கள், பெற்றோலியம். ரசாயனப் பொருட்களும் மருந்துவகைகளும். **முக்கிய வர்த்தகப் பங்காளிகள்** (2006): ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய ராச்சியம், பெல்ஜியம், வெனிசுவெலா, கொலம்பியா, மெக்ஸிகோ.



லாஸ் அமெரிக்காஸ் சர்வதேச விமானநிலையம்

## பிரசித்தி பெற்ற இடங்கள் சில....

- சமானா விரிகுடா
- கொலம்பஸ் அல்கார்
- கொலோனியல் ஸோன்
- ஒசாமா கோட்டை
- கொலம்பஸ் பூங்கா
- எல் செல்டோ டெல் லிமன் நீர்வீழ்ச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நிறவெறிக்கு எதிராகப் போராடிய நெல்சன் மண்டேலா


மண்டேலா ஜனாதிபதியாக தெரிவானபோது...

*தென்னாபிரிக்கா, உலகில் மிகப்பெரிய தங்க உற்பத்தி நாடு. இங்கு கறுப்பின ஆபிரிக்கர் 79% வாழ்கின்றனர்.ஏனையோர் வெள்ளையினத்தவராவர். 1867 இல் தென்னாபிரிக்காவில் தங்கம் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர், சிசில் ரோட்ஸ் எனும் ஆங்கிலேயரின் தலைமையில் அங்கு குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. இதனால், ஆபிரிக்க கறுப்பினத்தவர்களுக்கும் வெள்ளை இனத்தவர்களுக்கும் இடையில் 1899 இல் யுத்தம் ஏற்பட்டது. இந்த யுத்தத்தின் இறுதியில் வெள்ளையினத்தவர்கள் வெற்றி கண்டனர்*




## ஜூலை 18: நெல்சன் மண்டேலா சர்வதேச தினம்

1961 இல் இந்த நாடு குடியரசாக்கப்பட்டபோதிலும், ஆபிரிக்க கறுப்பின மக்கள் ஆட்சியில் பங்குபெற அனுமதிக்கப்படாமையால், ஆபிரிக்கக் காங்கிரஸ் தலைமையில் ஆயுதப்போராட்டம் தொடங்கப்பட்டது. இப்போராட்டத்தின் தலைவராகக் கருதப்படுபவரே 'நெல்சன் மண்டேலா'.


நெல்சன் மண்டேலா சிறையிலிருந்து விடுதலையானபோது...

## யார் இவர்?

நெல்சன் மண்டேலா (Nelson Mandela ) 1918 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 18 ஆம் திகதி தென்னாபிரிக்காவின் முவேசோ எனும் கிராமத்தில் பிறந்தார். உலகில் நிறவெறிக்கு எதிராகப் போராடிய முக்கிய தலைவர்களில் ஒருவராக இவர் மதித்துப் போற்றப்படுகின்றார். அகிம்சை வழியில் நம்பிக்கைகொண்டு ஆரம்பத்தில் தனது போராட்டத்தை ஆரம்பித்த இவர், பின்னர் ஆயுதமேந்தி கெரில்லாப் போர் முறையில் தனது போராட்டத்தைத் தொடரும் நிலைக்குத் தள்ளப்பட்டார்.

தென்னாபிரிக்காவின் வெள்ளையர் அரசாங்கத்தை எதிர்த்தமைக்காக, 1964ஆம் ஆண்டில் இவர் சிறையிலிடப்பட்டார். கேப்டவுனிலிருந்து 18 மைல் தொலைவில் தனிமைப்படுத்தப்பட்ட ரொபென் தீவிலுள்ள சிறையிலேயே இவர் பெருமளவு காலத்தைக் கழித்துள்ளார்.


நொபெல் விருது வழங்கப்பட்டபோது...

1990 ஆம் ஆண்டு பெப்ரவரி 11 ஆம் திகதி சிறையிலிருந்து விடுதலையானார். சிறையிலிருந்து விடுதலையாகும்போது, இவருக்கு வயது 71 ஆகும். தனது விடுதலைக்குப் பின்னர், நாட்டில் இனவெறி ஆட்சியை அகற்றுவது தொடர்பான பேச்சுவார்த்தைகளில் மண்டேலா முக்கிய பங்கேற்றார்.

நெல்சன் மண்டேலாவின் விடுதலையானது, தென்னாபிரிக்காவில் நிறவெறி ஆட்சி ஒழிய வேண்டுமென்று ஆவல்கொண்ட விடுதலை வீரர்களின் கனவு மெய்ப்படவும் தென்னாபிரிக்காவில் ஜனநாயகம் மலரவும் வழிவகுத்ததெனலாம். தென்னாபிரிக்காவில் ஜனநாயக முறையில் தேர்தல் நடக்க இவரது நடவடிக்கைகள் வழிவகுத்தன. இதற்கமைய, 1994 ஆம் ஆண்டில் அமைதியான முறையில் மலர்ந்த தென்னாபிரிக்கக் குடியரசின் முதலாவது கறுப்பின அதிபராக நெல்சன் மண்டேலா தெரிவாகி, 1999 ஜூன் மாதம்வரை இவர் அந்நாட்டு ஜனாதிபதியாக பதவி வகித்தார்.

நெல்சன் மண்டேலா சிறையிலிருந்து விடுதலையான 20 ஆம் வருட நிறைவு விழா கேப்டவுனுக்கு அருகிலுள்ள 'விக்டர் வெர்ஸ்டர்' சிறைச்சாலை முன்றலில் கடந்த வருடம் பெப்ரவரி மாதம் 11 ஆம் திகதி இடம்பெற்றது. இதன்போது, ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் வர்ணங்களான மஞ்சள், கறுப்பு, பச்சை ஆகிய நிறங்களில் அலங்கார உடைகளை அணிந்தவாறு பெருந்தொகையான மக்களும் தென்னாபிரிக்க விடுதலைப் போராட்டப் பிரமுகர்களும் இங்கு கூடிநின்று ஆடிப்பாடிக் கொண்டாடினர்.


மண்டேலாவின் 92ஆவது பிறந்தநாளன்று குடும்பத்தினருடன்...

## பெற்ற விருதுகள்

1993 ஆம் ஆண்டில் இவர் 'அமைதிக்கான நொபெல் பரிசு' வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். 2006 ஆம் ஆண்டு சர்வதேச மன்னிப்புச் சபையின் அதிகௌரவ விருதான 'மனசாட்சியின் தூதுவர் விருது' மண்டேலாவுக்கு வழங்கப்பட்டது. இந்த விருதுகள் உள்ளடங்கலாக சுமார் 250 விருதுகளை இவர் பெற்றுள்ளார்.

மனித உரிமைகளை மேம்படுத்தவும் ஆண்-பெண் சமவுரிமை ஏற்படவும் மனித இனங்களுக்கிடையே நல்லிணக்கம் மலரவும் பாடுபட்ட மண்டேலாவின் உழைப்பை நினைவுகூரும் வகையில், அவரின் பிறந்தநாளை சர்வதேச தினமாகப் பிரகடனப்படுத்துவதற்கு கடந்த 2009 நொவெம்பர் மாதம் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் தீர்மானிக்கப்பட்டது. அதனையடுத்து, முதல்தடவையாக 2010 ஆம் ஆண்டு ஜூலை 18 ஆம் திகதியன்று நெல்சன் மண்டேலா சர்வதேச தினம் அதிகாரபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

**ஏ.எஸ்.அமானி**

*'மனித உரிமைகளை மேம்படுத்தவும் ஆண்-பெண் சமவுரிமை ஏற்படவும் மனித இனங்களுக்கிடையே நல்லிணக்கம் மலரவும் பாடுபட்ட மண்டேலாவின் உழைப்பை நினைவு கூரும் வகையில், அவரின் பிறந்தநாளை சர்வதேச தினமாகப் பிரகடனப்படுத்துவதற்கு கடந்த 2009 நொவெம்பர் மாதம் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் தீர்மானிக்கப்பட்டது'*


விக்டர் வெர்ஸ்டர் சிறைச்சாலை முன்றலில் அமைக்கப்பட்டுள்ள மண்டேலா உருவச் சிலை...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் - II (கடந்த வாரத் தொடர்ச்சி)

பெயர்: ........................................ நேரம்: 45 நிமிடங்கள்

27. உருவில் காட்டப்பட்டுள்ள இசைக்கருவிகளை இனங்கண்டு அவற்றின் பெயரை அடைப்புக்குள் உள்ள பெயர்களிலிருந்து தெரிவுசெய்து, புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
வயலின், மரக்காஸ், தம்பட்டம், ரம், றம்பட், மகுடி



(1) .............. (2) .............. (3) .............. (4) ..............

28. கீழ்வரும் உருக்களின் பெயரை இனங்கண்டு, அடைப்புக்குள் உள்ள பெயர்களிலிருந்து தெரிவுசெய்து, அதன் இலக்கத்தை உருக்களின் கீழுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

(1) கைப்பை (2) கைக்கூடை (3) ஆட்டுக்கல்
(4) விற்றராசு (5) திருகை (6) நெம்புகோல் தராசு



(1) .............. (2) .............. (3) .............. (4) ..............

29. உருவில் காணப்படும் திண்மத்தில் உள்ள



(1) விளிம்புகளின் எண்ணிக்கை யாது? ..............................
(2) உச்சிகளின் எண்ணிக்கை யாது? ..............................

30. 
கம்பி வலையின் ஓர் அடைப்பின் நீளமும் அகலமும் முறையே 1cm ஆகும். கம்பி வலையினுள்ளே $16cm^2$ பரப்பளவைக்கொண்ட ஒரு வடிவத்தை நிழற்றுக.

31. உருவில் நிழற்றப்பட்ட பகுதியை முழு உருவின் பின்னமாக எழுதுக.



..............................

32. இவ்வுருவின் சுற்றளவைத் தரப்பட்டுள்ள அளவீடுகளுக்கேற்பக் காண்க.




..............................

33. செவ்வக வடிவான காணி ஒன்றின் அகலம் 12m ஆகும். அதன் நீளம் அகலத்தின் மூன்று மடங்கு. அக்காணியின் பரப்பளவைக் காண்க.

..............................

34. 9m நீளமான கம்பித்துண்டு ஒன்றில் 2m 25cm நீளமுள்ள ஒரு துண்டு வெட்டப்பட்டது. மீதித் துண்டின் நீளம் யாது?

..............................

35. 500g சீனியின் விலை ரூ 28.00 ஆகும். 1250g சீனியின் விலை யாது?

..............................

36. மீனாவிடம் 1013 முத்திரைகள் உள்ளன. றோசியிடம் 1330 முத்திரைகள் உள்ளன. இருவரிடமும் முத்திரைகளின் எண்ணிக்கை சமமாவதற்கு மீனாவிற்கு இன்னும் எத்தனை முத்திரைகள் தேவை?

..............................

37. இலங்கையின் பழைய நேரம், கடிகாரம் A யின் முகத்தில் காட்டப்பட்டுள்ளது. இலங்கையின் புதிய நேரத்தை கடிகாரம் B யின் முகத்தில் வரைந்து காட்டுக.




38. ஒரு கார் சென்ற தூரம் மானியில் பின்வருமாறு காட்டப்பட்டிருந்தது.

| 0 | 5 | 9 | 9 | 8 |
|---|---|---|---|---|

அது மேலும் 2km சென்ற பின்னர் காணப்படும் இலக்கங்களை வெற்று அடைப்புக்களில் எழுதுக.

| | | | | |
|---|---|---|---|---|

39. பாடசாலை ஒன்றிற்கு மாணவர்கள் வந்த மார்க்கங்களின் விபரங்கள் அட்டவணையில் தரப்பட்டுள்ளன. இத்தரவுகளைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

| பயண வகைகள் | மாணவர் விபரம் | |
|---|---|---|
| | ஆண் | பெண் |
| கால் நடை | 45 | 60 |
| பஸ்வண்டி | 35 | 45 |
| துவிச்சக்கர வண்டி | 30 | 40 |
| புகைவண்டி | 20 | 25 |

(1) பஸ் வண்டியின்மூலம் வந்த மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?....................
(2) துவிச்சக்கர வண்டியின்மூலம் வந்த ஆண்பிள்ளைகளின் எண்ணிக்கை யாது?..............................
(3) கால்நடையாக வந்த மாணவர்களின் எண்ணிக்கைக்கும் போக்குவரத்துச் சாதனங்கள் மூலமாக வந்த மாணவர்களின் எண்ணிக்கைக்கும் இடையிலான வித்தியாசம் யாது? ..............................




(4) எல்லா மார்க்கங்களிலும் வந்த ஆண்பிள்ளைகளை கீழே தரப்பட்டுள்ள வரைபில் குறித்துக்காட்டுக.




40. பின்வரும் பந்தியை வாசிக்க.

முரளி, லவன், பிரதீபன் ஆகிய மூவரும் பாடசாலைக்குப் புகைவண்டியில் சென்று வருவார்கள். ஒரு நாள் அவர்கள் புகைவண்டியில் சென்றுகொண்டிருந்தபோது, பிரதீபன் தனது ஆசனத்திற்குக்கீழ் ஒரு சிறிய காகிதப்பொதியைக் கண்டான். அதனைக் குனிந்து எடுத்தான்..............................

★ **இதனைத் தொடர்ந்து நடந்தவற்றை விபரிக்கும் ஆறு வாக்கியங்களை எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் குறைந்தது நான்கு சொற்களாவது இடம்பெற்றிருத்தல் வேண்டும். அவ்வாக்கியங்களில் எழுவாய், பயனிலை தொடர்பு திருத்தமானதாக இருத்தல் வேண்டும்.)**

(1) ..............................
(2) ..............................
(3) ..............................
(4) ..............................
(5) ..............................
(6) ..............................

## வினாத்தாள் - II இற்கான விடைகள்

*(ஜூலை 6,13 ஆம் திகதிகளில் பிரசுரமானவை)*

(01) 01. காலைக்காட்சி
02. ஆதவன், கதிரவன்
03. கொண்டை, கரிய
04. செம்மை+தாமரை
05. நிமிடங்கள்
06. அங்குமிங்கும்
07. சலசல
08. (அ) கழனி (ஆ) வாவி
09. உழவுத் தொழில்
10. நெற்சப்பி, கோரை, முள்ளி

(02) 1. மந்தி 2. குறு குறுக்கும்

(03) 1. பிரதீபனும் குமாரும் ஓடி வந்தார்கள்.
2. புலவர் பாரியைப் புகழ்ந்து பாடினார்.

(04) 1. அந்தக் காட்டிலே வேடுவர்கள் வாழ்கிறார்கள்.
2. சந்திரனில் வளிமண்டலம் இல்லாததால் ஒலியைக் கேட்க முடியாது.

(05) 1. கொடுத்த வாக்கை மீறுதல்/ பேச்சுறுதி தவறுதல்
2. வறுமையிலும் செம்மையாக வாழ்

(06) 1. சுயநலவாதி 2. வேட்பாளர்

(07) 1.Hospital 2. Green 3. Rainbow

(08) 1. தயவுசெய்து அமருங்கள் 2. பிறந்தநாள் வாழ்த்துக்கள்
3. நூல்நிலையத்திற்குச் செல்லுங்கள்.

(09) 1. ஆசிரியர் 2. தேங்காய்

(10) 1. தஹய 2. கிரிபத்

(11) 2 (12) 2 (13) 3 (14) 2 (15) 2
(16) 3 (17) 3 (18) 2 (19) 2 (20) 2
(21) 2 (22) 3 (23) 1 (24) 2 (25) 3
(26) 3 (27) i. றம்பட் ii. மகுடி iii. வயலின் iv. தம்பட்டம்
(28) i. 5 ii. 2 iii. 1 iv. 3
(29) i. 6 ii. 4

(30) 

(31) 2/8 (32) 40m (33) $432m^2$
(34) 6m75cm (35) ரூ.70.00
(36) 317 முத்திரைகள்

(37) 

(38) 06000
(39) i. 80 மாணவர்கள்
ii. 30 பேர் iii. 90
iv.




(40) பொருத்தமான ஆறு வாக்கியங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








# சுயதொழில் வாய்ப்பு

புதிதாகத் தொழில் ஒன்றைத் தொடங்கி, அதனை ஒரு சாம்ராஜ்யமாக உருவாக்க வேண்டுமென்ற எண்ணம் நமது இளைஞர்களுக்கு நிறையவே இருந்தபோதிலும், அதனை எங்கு தொடங்கவேண்டும், எப்படித் தொடங்கவேண்டும், எதனைத் தொடங்க வேண்டும் என்பதில் அவர்களுக்குச் சரியான வழிகாட்டுதல்கள் கிடைப்பதில்லை.

நம்மிடம் எது அதிகமாக இருக்கின்றதோ, அதனை முதலீடு செய்தால், நிச்சயமாக நாம் ஆரம்பிக்கப்போகும் தொழிலில் வெற்றி பெறலாம். பணம் அதிகமாக இருந்தால், பணத்தை முதலீடு செய்யலாம். அறிவுத்திறன் அதிகமாக இருந்தால், அதனையே முதலீடு செய்யலாம். கடுமையாக உழைக்கும் ஆற்றல் இருந்தால் அதனைக்கூட முதலீடாக்கித் தொழில் ஒன்றைத் தொடங்கலாம். இதுவே தொழில் விருத்திக்கான முதல் சூத்திரமாகும்.

அதிகமானோர், தொழில் ஒன்றை ஆரம்பிக்க நினைக்கின்றபோது, முதலீடாகப் பணத்தை மாத்திரமே பொருத்திப் பார்க்கின்றனர். தொழில் ஒன்றை ஆரம்பிப்பதற்கு பணமுதலீடு முக்கியமானது என்ற ஒரு காலம் இருந்தது, அது இப்போது மாறிவிட்டது. முன்னைய காலங்களை விட, கையில் பணமில்லாமல் தொழிலை ஆரம்பிப்பதற்கான அரிய பல வாய்ப்புக்கள் இக்காலத்தில் அதிகமாகவே காணப்படுகின்றன.

பணம் இருந்தால்தான் தொழிலொன்றை ஆரம்பிக்க முடியும் என்ற நினைப்பில் மட்டும் நாம் இருப்போமானால், எம்மால் ஒருகாலமும் தொழிலொன்றை ஆரம்பிக்க முடியாதென்பதை நாம் உணரவேண்டும். அத்துடன், தேவையான பண வசதியுடன், தொழில் முயற்சியில் இறங்க நினைக்கும் சிலருக்கு முதலீடு செய்து கையிலிருக்கும் பணத்தை இழந்துவிட்டால், மறுபடி என்ன செய்வது என்ற அச்சமும் இருக்கின்றது.

எந்த விடயத்தையும் தெளிவுபட முன்னிறுத்துகின்ற ஆற்றல், துறைசார்ந்த வல்லுனர்களின் தொடர்பு, நேரம் காலம் பார்க்காமல் நினைத்ததை அடையத் துடிக்கும் உழைப்பு, உதவிக்கு வரத் தயாராக இருக்கும் நட்பு வட்டாரம், பேச்சுத்திறன், நேர்மை, தேடலும் தேடலால் கிடைக்கின்ற அறிவும் இப்படிப் பல விடயங்களும் முதலீடுகள்தான். இவற்றோடு, பணத்தை இன்னொரு காரணியாகச் சேர்த்துக்கொள்ளலாம்.

'இன்று நமது நாட்டில் சுயவேலை வாய்ப்பென்றால் உட்கார்ந்துகொண்டு அல்லது ஓடிக்கொண்டே தொழில் புரிவதையே அதிகமான இளைஞர்கள் விரும்புகின்றனர். அந்தவகையில், தொலைதொடர்பாடல் நிலையத்தை நடாத்துவது, அல்லது ஒருமுச்சக்கர வண்டியை தவணைக் கட்டண முறையில் வாங்கி இதன்மூலம் சம்பாதிப்பது என்பன வற்றையே சுயதொழில்துறை என்று கருதுகிறார்கள். அதனை எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாது. சுயதொழில் வாய்ப்பென்பது, ஏதாவதொரு கைத்தொழிலைத் தொடங்குவதையே குறிக்கும். நாம் தேர்ந்தெடுக்கின்ற சுயதொழிலில் தொடர்ந்து முன்னேறி, வளர்ச்சி காணவேண்டும். இன்று ஆரம்பிக்கப்பட்ட சிறுகைத்தொழில், சிறிது காலத்தில் நடுத்தரக் கைத்தொழிலாகி, பின்னர் பாரிய அளவில் தொழிலாளர்கள் பலரைக் கொண்டு இயங்கக்கூடிய முறையில் அமையவேண்டும். நமது சுயதொழில் வாய்ப்பால் எதிர்காலத்தில் நாட்டிற்கும் நமக்கும் நற்பலன் கிடைக்கவேண்டும் என்பதை நாம் உணர்ந்துகொண்டால் அதுவே போதுமானதாகும்.





**செம்மைத்துளியான்**

## சாதனையாளர் - மின்சக்தி

# ஒட்டோவான் கூர்க்கி


(1602-1686)

மின்சக்தி குறித்து முன்னோடியாக ஆய்வு நடத்தி மின்சாரத்தைக் கண்டுபிடிப்பதற்கு வழியமைத்துக் கொடுத்தவர்களில் ஒட்டொவான் கூர்க்கி முக்கியமானவர். இவரே; தேங்கும் மின் ஊட்டக்கருவியைக் கண்டுபிடித்தவருமாவார்.

1602 ஆம் ஆண்டு நொவெம்பர் மாதம் 20 ஆம் திகதி பிறந்த இவர், ஜேர்மனியின் மாக்டிபெர்க் நகர பிதாவாக, பொதுப்பணிகளில் அர்ப்பணிப்போடு செயற்பட்டார். அக்காலகட்டத்தில் பகல் நேரம் முழுவதும் நகர வளர்ச்சிப் பணியில் ஈடுபட்ட பின்னர் இரவு நேரத்தில் விஞ்ஞான ஆராய்ச்சிகளில் இவர் ஈடுபட்டார்.

இவரின் ஆய்வுகளின்போது, மின்சாரத்தை உற்பத்தி செய்ய அம்பர்கல் போன்றவற்றை தேய்க்க வேண்டியிருந்தது. இம்முறையின்மூலம் வெளிவந்த மின்சாரத்தின் அளவோ மிக மிகக் குறைவாகவே காணப்பட்டது. இந்த மின்சாரத்தின்மூலம் மேலும் ஆய்வுகளை நடத்துவது மிகவும் கடினமாக இருந்தது. இந்நிலையில் ஒரு கணிசமான அளவு மின்சாரம் கிடைக்க வழி என்ன? என ஒட்டோவான் கூர்க்கி மிகத் தீவிரமாக சிந்திக்க ஆரம்பித்தார்.

கந்தகம் அரக்கு போன்ற பொருட்களில் தொடர்ந்து உராய்வை உண்டாக்கினால் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியுமா? என்று சிந்தித்தார். அதற்காக, கந்தகத்தைக்கொண்டு பெரிய அளவிலான பந்து ஒன்றைத் தயாரித்தார். அப்பந்தைச் சுழலச் செய்யும் வகையில் அதன் இருபுறத்தின் மையமாக அச்சாணி ஒன்றைப் பொருத்தினார். அந்த அச்சாணியுடன் ஒரு கைப்பிடியைச் செய்து பந்தை சுழலச்செய்வதற்கு ஏற்ப இணைத்துப் பொருத்திக்கொண்டார்.

அதைத் தாங்கிப் பிடித்துக்கொள்ளும் வகையில் மரப்பலகையை அமைத்து, அந்தக் கந்தகப் பந்தை அத்துடன் இணைத்து மேலும் பட்டுத்துணியால் ஆன கையுறை ஒன்றைத் தயார் செய்து தனது ஒரு கையில் அணிந்துகொண்டார். மற்றொரு கையால் கைப்பிடியைச் சுழற்றி, கந்தகப் பந்தை சுழலச்செய்தார். பட்டுத்துணியையும் கந்தகப் பந்தையும் தொடர்ந்து உராயச் செய்தார். அந்தவகையில் பந்து சுழலும்போது தொடர்ந்து மின்சாரம் வெளிவரத்தொடங்கியது. இவ்வாறு வெளிவரும் மின்சாரம் எந்தெந்தப் பொருட்களை ஈர்க்கின்றது என்பதை ஆராயத் தொடங்கினார். பல்வேறு பொருட்களை அப்பந்தில் உராய விட்டுப் பார்த்தார்.

உலோகங்களை இச்சக்தி ஈர்க்கின்றதா? என்பதை அறிய இரும்பு கம்பியால் மின்சாரம் வெளிவரும் கந்தகப்பகுதியைத் தொட்டார். ஆனால், இரும்புக் கம்பி ஈர்க்கப்படவில்லை. செம்பு, வெள்ளி, பித்தளை, தங்கம் போன்ற ஏனைய உலோகங்களையாவது இழுக்கிறதா? என பரிசோதிக்கும் நோக்குடன் கந்தகப் பந்தைத் தொட்ட அந்த இரும்புக் கம்பியை கீழே வைத்தார். அப்போது ஓர் அற்புதம் நிகழ்ந்தது. கீழே வைக்கப்பட்ட அந்த இரும்புக் கம்பி அருகில் இருந்த சில பொருட்களை இழுத்துக்கொண்டது.

இதன்மூலம் இரும்பு போன்ற உலோகப்பொருட்கள் மின்சாரத்தைக் கடத்துகின்றன என்பதனை உறுதிசெய்தார். பின்பு வெள்ளி, தங்கம், செம்பு போன்ற உலோகங்களையும் இவ்வாறு பரிசோதித்து உறுதிசெய்துகொண்டார்.

பரிசோதனைக்காக உருவாக்கப்பட்ட அந்த கந்தகப் பந்து கருவிக்கு 'தேங்கும் மின் ஊட்டக் கருவி' (ஸ்டேட்டிக் எலக்ட்ரிக் மிஷன்) என அழைத்தார். மின்சாரக் கண்டுபிடிப்பிற்கு முன்னோடியாகத் திகழ்ந்த ஒட்டோவான் கூர்க்கி 1686 இல் மறைந்தார்.

**(ஆர்.ஜே)**

## விஜய் மாணவர் கழகம்


அங்.இல: 4199
ஞா.தருணிகன், உருத்திரபுரம், கிளிநொச்சி.


அங்.இல: 4200
ஜெ.பஷாரத், பாக்கியத்துஸ் ஸாலிஹா, பெரிய நீலாவணை.


அங்.இல: 4201
நே.ஹரிஹரன், பெரியார் குளம், வவுனியா.


அங்.இல: 4202
எஸ்.நதுஷா, நாரஹேன்பிடி, கொழும்பு-05.


அங்.இல: 4203
எஃப்.லினா, மெதடகொலன்னாவ, வெள்ளம்பிடிய.


அங்.இல: 4204
என்.நாஸிர், ஹொரவப்பொத்தான, அநுராதபுரம்.


அங்.இல: 4205
எம்.இலாம், சம்தூர் கம, பண்டாரவளை.


அங்.இல: 4206
இ.பிரலன்சா, மீசாலை மேற்கு, மீசாலை.


அங்.இல: 4207
செ.பிரசாந்த், யொக்ஸ் போர்ட், வட்டகொடை.


அங்.இல: 4208
மாஹிரா ஹம்ஸா, வளஹவித்தவெவ, அநுராதபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் தற்போது நிலவி வரும் உணவுத் தட்டுப்பாட்டுக்குத் தீர்வாக, குறுகிய காலத்தில் விரைவாக சிறந்த பலனைத்தரக் கூடிய பயிர்ச்செய்கை முறை தொடர்பாக கூடுதல் கவனம் செலுத்தப்படுகின்றது. இதில் வர்த்தக ரீதியான பிரயோசனங்களும் உள்ளன. இப்பயிர்ச் செய்கையின்போது, சரியான முறை பின்பற்றப்படல் வேண்டும். இதன்மூலமே சிறந்த பலனைப் பெறலாம்

# ஒட்டுமுறைமூலம் தாவர இனவிருத்தி



அந்தவகையில், குறுகிய காலத்தில் விரைவான பலனைத் தரக்கூடிய பயிர்ச்செய்கை முறையில், தாவர ஒட்டுமுறைமூலம் பெறப்படுகின்ற தாவரங்களுக்கு அதிக கேள்வி நிலவுகின்றது. அதன்படி, உணவுக்காக வளர்க்கப்படும் பயிர்கள், அலங்காரத் தாவரங்கள், மலர்ச் செடிகள், பழம் தரும் மரங்கள் என்பனவற்றை தாவர ஒட்டுமுறைக்கு உட்படுத்துவதனூடாக, அதிக பலன் பெறப்படுகின்றது. ஆகவே, ஒட்டுமுறையூடாக தாவர இனவிருத்தி செய்யப்படுவதையும் அது குறித்த மேலும் பல தகவல்களையும் இங்கு நோக்குவோம்.




ஒட்டுமுறையின்போது பயன்படும் பொருட்கள்



ஒட்டுமுறைக்கு உட்படுத்தப்பட்டுள்ள ரோஜா



## தாவர இனவிருத்தி

தாவர இனவிருத்தியானது, பொதுவாக இரண்டு பிரதான வழிகளில் இடம்பெறுகின்றது.

1. விதை மூலமான இனவிருத்தி.
2. முளை மூலமான இனவிருத்தி.

முளை மூலமான இனவிருத்தியில் தாவரக்கிளை (தண்டு), அரும்பு, இலைகள் என்பனவற்றினூடாக நடைபெறும் இனப்பெருக்க முறைகள் உள்ளடங்குகின்றன.



ஒட்டுமுறைக்கு உட்படுத்தப்பட்ட ரம்புட்டான் மரம் பலன் தந்துள்ள விதம்

நாம் தாவரச்செய்கையில் ஈடுபடும்போது, இத்தகைய முறைகள் ஊடாகவும் பயிரிடலை மேற்கொள்கின்றோம். ஒட்டுமுறை மூலம் பெறப்படும் தாவரங்கள், குறுகிய காலத்தில் பூத்துக் காய்த்து பலன் தருவதுண்டு. ஒட்டுமுறையானது, தாவர இனப்பெருக்கமுறைகளில் ஒன்றாகும். வர்த்தக நோக்கத்திலான பயிரிடலில் அதிக வருமானம் ஈட்டித்தருவதாக இம்முறை அமைந்துள்ளது.

## தாவர ஒட்டுமுறை என்பது...

இரண்டு தாவரங்களின் பாகங்களை ஒன்றாக இணைத்து தாவரமொன்றை உருவாக்குவது 'ஒட்டுமுறை' எனப்படும். இம்முறையானது தாவரங்களின் இனப்பரம்பலை விஸ்தரிப்பதற்கான ஒரு முறையாகவும் கொள்ளப்படுகின்றது. தாவர ஒட்டுமுறையில் இரண்டு விடயங்கள் பிரதான இடத்தை வகிக்கின்றன.

அவையாவன;

i. ஒட்டுக்கட்டை
ii. ஒட்டுமுளை

## ஒட்டுக்கட்டை

சிறந்த பலன்தரும் தாவரம் ஒன்றை உருவாக்கும் நோக்கில் வேறொரு தாவரத்தின் பகுதியை தாங்கவுள்ள (ஒட்டுப்போடப்படவுள்ள) தாய்த்தாவரத்தின் மண்ணுடன் தொடர்புபடுகின்ற பகுதி 'ஒட்டுக்கட்டை' எனப்படுகின்றது.

## ஒட்டுமுளை

குறுகிய காலத்தில் நல்ல பலனைத்தரக்கூடிய மற்றொரு தாவரத்திலிருந்து பெறப்பட்டு ஒட்டுக்கட்டையுடன் ஒட்டப்படுகின்ற அரும்பு, முளை அல்லது சிறுகிளை 'ஒட்டுமுளை' எனப்படும்.



ஒட்டுமுறைக்குட்படுத்தி பலன்தந்துள்ள பழமரங்கள்

## தாவர ஒட்டுமுறை

தாவர ஒட்டுமுறையானது, இரண்டு வழிகளில் மேற்கொள்ளப்படுகின்றது.

i. கிளை/தண்டு ஒட்டல்
ii. தளிர் (அரும்பு) ஒட்டல்

## கிளை/தண்டு ஒட்டல் முறை

மிகவும் இலகுவான ஒட்டுமுறையை மேற்கொள்ள கிளை/

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'குறுகிய காலத்தில் விரைவான பலனைத் தரக்கூடிய பயிர்ச்செய்கை முறையில், தாவர ஒட்டுமுறைமூலம் பெறப்படுகின்ற தாவரங்களுக்கு அதிக கேள்வி நிலவுகின்றது. அதன்படி, உணவுக்காக வளர்க்கப்படும் பயிர்கள், அலங்காரத் தாவரங்கள், மலர்ச் செடிகள், பழம் தரும் மரங்கள் என்பனவற்றை தாவர ஒட்டுமுறைக்கு உட்படுத்துவதனூடாக, அதிக பலன் பெறப்படுகின்றது'

தண்டு ஒட்டுமுறையே அதிகம் பயன்படுத்தப்படுகின்றது. மா, பலா, கொய்யா, ஆணைக்கொய்யா, சிற்றஸ் இனத்தாவரங்கள் என்பனவற்றில் கிளை/தண்டு ஒட்டுமுறையே அதிகம் மேற்கொள்ளப்படுகின்றது.

## கிளை/தண்டு ஒட்டலின் நன்மைகள்

★ குறுகிய காலத்தில் சற்றுப் பெரிய செடியொன்றைப் பெறலாம்.

★ இளம் தாவரமாக இருந்தால்,தாய்த்தாவரத்தின் தண்டின் விட்டத்திற்குச் சமமானதாக அல்லது பெரிதானதாக இருந்தாலும் ஒட்ட முடியும்.

## தளிர் ஒட்டல்

வேறொரு தாவரத்தில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தளிரை (அரும்பை) தாய்த்தாவரத்தில் ஒட்டுதல் இந்த முறையைச் சாரும். இது பல்வேறு முறைகளில் இடம்பெறும். அவையாவன;

★ H வடிவிலான ஒட்டல் முறை
★ ப்ளாஸ்டர் ஒட்டல் முறை
★ மேற்பகுதி T ஒட்டல் முறை
★ கீழ்ப்பகுதி T ஒட்டல் முறை

## ஒட்டுக்கட்டைத் தாவரத்தில் காணப்பட வேண்டிய இயல்புகள்

★ ஆழமாகவும் செழிப்பாகவும் வளர்ந்த வேர்த் தொகுதியொன்று இருக்க வேண்டும்.

★ ஒட்டுமுளைத் தாவரத்துடன் நன்கு தொடர்புபடல்.

★ நீர்ப் பற்றாக்குறை நிலவும்போதும் அதிக ஈரப்பதன் நிலவும்போதும் (பொருத்தமற்ற சூழலாயினும்) தாக்குப்பிடிக்கும் ஆற்றல் பெற்றிருத்தல்.

★ குறிப்பிட்ட பிரதேசத்தின் சீதோஷ்ணநிலைக்குத் தாக்குப்பிடித்தல்.

★ பூஞ்சணம், பக்ற்றீரியா தாக்கங்களை எதிர்க்கும் தன்மை பெற்றிருத்தல்.

## ஒட்டுமுளைத் தாவரத்தில் காணப்பட வேண்டிய இயல்புகள்

★ உயர்வகைத் தாவரமாக (நல்ல அறுவடை தரக்கூடிய, சுவைமிகு பழங்களைத் தரக்கூடியதாக இருத்தல்)

★ ஒட்டுக்கட்டைத் தாவரத்துடன் மிகவும் பொருந்தக்கூடியதாக இருத்தல்.

★ ஆரோக்கியமான - உறுதியான தாவரமாக இருத்தல்.

## ஒட்டுமுறையில் கவனிக்கப்பட வேண்டியவை

★ ஒட்டுக்கட்டைத் தாவரமும் ஒட்டுமுளைத் தாவரமும் ஓர் இனத்தைச் சேர்ந்தவையாக இருக்க வேண்டும்.

★ ஒட்டுக்கட்டைத் தாவரமும் ஒட்டுமுளைத் தாவரமும் ஒன்றை ஒன்று பொருந்திக்கொள்ள வேண்டும்.

★ ஒட்டுமுளைத் தாவரத்திலிருந்து அரும்பினை வேறுபடுத்தும்போது, அதன் கலங்கள் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும்.

★ ஒட்டப்பட்ட பின்னர் அதற்குள் நீர் புகா வண்ணம் பாதுகாப்பாக சுற்றிக் கட்டப்பட வேண்டும்.

★ ஒட்டல் முறை வெற்றியளிக்கும் வரையில் அதனைப் பாதிக்கும் புறக்காரணிகளில் இருந்து பாதுகாக்க வேண்டும்.

★ ஒட்டுமுறை வெற்றியளித்திருந்தால், ஒட்டப்பட்ட இடம் பருத்து - பச்சை நிறமாக தோற்றமளிக்கும்.

## ஒட்டுமுறையின்போது பயன்படுத்தப்படும் பொருட்கள்

★ ஒட்டுக்கட்டைத் தாவரம்
★ குடைந்து எடுக்கும் கத்தி
★ தண்டு விருத்திக் குவளை
★ ஒட்டுமுளைத் தாவரம்
★ வரிந்து கட்டும் பட்டி (பொலித்தீன் அல்லது பொலிசெக் நூல்)

## கெம்பியம் இழையத்தின் முக்கியத்துவம்

ஒட்டுமுறையின்போது, இரண்டு பகுதிகளும் பலமாக ஒட்டிக்கொள்ளச் செய்வதில் கெம்பியம் இழையத்தின் (Cambium tissue) பணி மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றது. காரணம், தாவரத்தில் உணவை கடத்திச் செல்லும் ஃப்ளோயம் (Phloem) இழையத்திற்கும் நீரைக் கடத்திச் செல்லும் ஷைலம் (xylem) இழையத்திற்கும் இடையிலேயே இந்த கெம்பியம் இழையம் அமைந்திருக்கின்றது. எனவே, ஒட்டுமுறைக்குப் பயன்படும் ஒட்டுமுளைத் தாவரத்திலிருந்து அரும்புடன் பட்டைப் பகுதியை குடைந்தெடுக்கும்போதும் அதனைப் பொருத்துவதற்காக, ஒட்டுக்கட்டைத் தாவரத்தை வெட்டும்போதும் கெம்பியம் இழையம் வரை ஆழமாக குடைந்து எடுக்கப்படல் வேண்டும். ஒட்டுமுறை வெற்றியளித்து புதிய தாவரம் வளரும்போது, இந்த கெம்பியம் இழையமும் நன்கு வளர்ச்சியடையும்.

அமீர் ஹுசைன்



இயற்கையாகவே ஒட்டியுள்ள தாவரங்கள்

## தாவர ஒட்டுமுறைகள் சில...




தளிர் ஒட்டுமுறை (ப்ளாஸ்டர் ஒட்டுமுறை)




கிளை ஒட்டுமுறை




தளிர் ஒட்டுமுறை (H வடிவிலான ஒட்டுமுறை)



சத்துமிக்க பழம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எலியும் பாலும்



ஒருநாள் இரண்டு எலிகள் உண்ண எதுவுமின்றி அங்கும் இங்கும் ஓடித்திரிந்தன. பசியை அறவே பொறுக்க முடியாத அவை தாங்கள் ஒளித்திருந்த வீட்டின் சமையல் அறைக்குள் புகுந்தன. அங்கே ஒரு பெரிய பாத்திரம் முழுவதும் பால் இருப்பதைக் கண்டன. ஆனால், அது மிகவும் உயரமான பாத்திரம். இதனால் பாலைக் குடிக்க முடியாமல் எலிகள் திண்டாடின. இதனையடுத்து இரு எலிகளும் ஒரு முடிவெடுத்தன. ஓர் எலியின் மீது இன்னோர் எலி ஏறி நின்று பாலைக் குடிக்கலாம் என்பதே அது. உடனே அதைச் செயற்படுத்தின. அதன்படி, மேலே உள்ள எலி பாலைக் குடித்தபோது, கீழே உள்ள எலி "போதும்! நான் பால் குடிக்க வேண்டும்...." எனக் கத்தியது. கீழிருந்த எலி போட்ட சத்தத்தால் மிரண்டுபோய் பால்குடித்த எலி பால் பாத்திரத்திற்குள் விழுந்துவிட்டது. அப்போது அந்த எலி "நல்லது, இனி எனக்குத்தான் பால் எல்லாம்" என்று பேராசையுடன் நினைத்தது. பின்னர் பால் முழுவதையும் குடிக்க முயன்றது. அதனால், முடியவில்லை. வெளியே செல்லவும் முடியவில்லை. இறுதியில் அது இறந்துபோய்விட்டது. பேராசை அதற்கு பெருவினை யாகவும் அமைந்துவிட்டது.



பஸ்ரினா,
மின்ஹாத் தே.பாட.,
திக்குவல்லை



# ஓசோன் படை

- ★ ஓசோன் படை மாறன் மண்டலத்திலேயே காணப்படும்.
- ★ இது சூரியனில் இருந்து வரும் ஒளி, வெப்பக் கதிர்களை தம்மூடாகச் செல்ல விட்டு, தீங்கு விளைவிக்கக்கூடிய புற ஊதாக் கதிர்களை ஊடுறுவ விடாது தடுக்கின்றது.
- ★ சூரியனில் இருந்துவரும் புற ஊதாக் கதிர்களால் தோல்புற்று, பார்வை கோளாறு போன்ற நோய்கள் ஏற்படுகின்றன.
- ★ சில வாயுக்களால் ஓசோன்படையின் தடிப்பு சிதைவடைகிறது.
- ★ வளிமண்டலக் கனவளவில் ஓசோன் 0.000007% ஆகும்.

கே.ஆர்.ரிஸ்லா,
கமு/அல்-ஹம்றா
வித்தியாலயம், மருதமுனை.

# இலங்கையின் பிரதான உற்பத்திகளும் காணப்படும் நிலையங்களும்



- பிறீமா ஆலை - திருகோணமலை
- சோயா ஆராய்ச்சி நிலையம் - பல்லேகலை
- இரும்புருக்குத் தொழிற்சாலை - ஒறுவல
- உலோக ஆலை - யக்கல
- ஓட்டுப்பலகை தொழிற்சாலை - ஜின்தோட்டை
- கட்டிப்பால் தொழிற்சாலை - பொலன்னறுவ
- பால் பதனிடும் தொழிற்சாலை - அம்பேவல
- அபடைட் கிடைக்குமிடம் - எப்பாவல
- பெற்றோலிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் - சபுகஸ்கந்த



ஏ.ஆர்.எப்.இன்ஸாபா,
பஹமுனே.

# ஆச்சரியத்தை அறிந்துகொள்வதற்கு....

- மூளை அதிகமாக வேலைவாங்கும் மனித உறுப்பு கட்டை விரல்.
- மனித மூளை 80 சதவீதம் நீரைக் கொண்டதாகும்.
- மூளையின் நிறம் பழுப்பான நீல நிறம்.
- மூளை 65 சதவீதம் கொழுப்புப் பொருளால் ஆனது.
- மனித உடலில் அதிக செல்களால் உருவான பகுதி மூளை.
- பெண்களை விட, ஆண்களின் மூளை பெரியது.
- நமது நரம்பு மண்டலம்தான் மூளைக்குத் தகவல்களை அனுப்புகிறது. அது ஒரு நிமிடத்திற்கு 6 லட்சம் தகவல்களை அனுப்புகிறது.
- மூளையின் கனப்பரிமானம் 1,500 கன சென்ரிமீற்றர்கள்.
- மனித மூளையில் தாமிரத்தின் அளவு 6 கிராம் ஆகும்.
- மூளையின் மடிப்புக்களே அறிவுக் கூர்மையை தீர்மானிக்கிறது.



மொஹிடீன் ஏ.அஸீஸ், மேமா/கள/ஸாஹிரா ம.வித்.,

# உலகின் புதுமைகள்

1. உலகின் ஆழமான ஆழி - மரியான ஆழி
2. உலகின் மிக நீளமான சுவர் - சீனப் பெருஞ்சுவர்
3. உலகின் மிக நீளமான நதி - நைல் நதி
4. உலகின் மிகப் பெரிய பாலைவனம் - சஹாராப் பாலைவனம்
5. உலகின் மிகப் பெரிய கண்டம் - ஆசியாக் கண்டம்
6. உலகின் மிகப் பெரிய மாளிகை - வத்திக்கான் மாளிகை
7. உலகின் பெரிய ஏரி - சுப்பீரியர் ஏரி

முஷாபா பாரூக்,
ஸாஹிரா தே.பாட., மாவனல்லை.



# நட்சத்திரங்கள் விழுகின்றனவா?





இரவு வானில் நட்சத்திரங்கள் கீழே விழுவதைப் போன்ற தோற்றங்களை நீங்கள் பார்த்திருக்கலாம். உண்மையில் அவை நட்சத்திரங்கள் அல்ல. வானில் இருந்து பூமியில் விழும் விண்கற்களே ஆகும். வளியூடாக, புவியை நோக்கி வரும் இந்த விண்கற்கள் எரிந்து நடுவானில் மறைந்துவிடுகின்றன.

எப்பொழுதாவது ஒரு முறை மிகவும் அருமையாகவே இவை பூமியில் விழுவதுண்டு. இவ்வாறு இவை விழுவதால் பாரிய குழி பூமியில் ஏற்படுகின்றன. அமெரிக்காவில் அரிசோனா பாலைவனத்தில் இவ்வாறான ஒரு குழி உண்டு. வால் வெள்ளியின் உடைந்த துண்டு களே இந்த விண்கற்கள் எனவும் நம்பப்படுகின்றது.

எம்.எல்.எப். ஹஸ்னா,
அல்-ஹிரா மு.ம.வித்.,
கொட்டாரமுல்லை

# இனி வருமா...?



*பதின்மூன்று வருடங்களாய் பாடசாலை எனும்*
*சாம்ராஜ்யத்தில் பறவைகள் போல் பாடித்*
*திரிந்தோமே- அந்தப் பசுமையான நாட்கள்*
*மீண்டும் வருமா....?*
*அந்த நாட்களை ஒரு கனம் நினைத்துப் பார்.....*
*நாம் சிரித்து விளையாடிய மைதானம்!*
*வகுப்பறை சுவரில் கிறுக்கிய சிறு ஓவியங்கள்!*
*ஒன்றாக உண்ட உணவுகள்!*
*அன்பாய் பிடித்த சண்டைகள்!*
*படித்தது மறந்து போகையில் பாசமாய் மீட்டித் தந்த*
*ஆசிரியர்*
*எத்தனை எத்தனை இனிய பல சந்தோஷங்கள்*
*அனைத்தையும் விட்டு நிரந்தரமாய் பிரியப்*
*போகிறோம் - இன்னும்*
*சில நாட்களில்.....*

எம்.என்.எஃப்.நஸீனா,
திகன, ரஜவெல.

# எனது பாடசாலை

கண்டி மாவட்டத்தின் கம்பளை வலயத்திற்குட்பட்ட ஆண்டியாக்கடவத்தைப் பகுதியில் எனது பாடசாலை அமைந்துள்ளது. இப்பாடசாலை 1947 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 01 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இதன் முதல் அதிபராக மர்ஹூம் ஹபீல் அவர்கள் திகழ்ந்தார். இப்பாடசாலை ஆரம்பத்தில் ஆண்டியாகடவத்தை அரசினர் கலவன் பாடசாலை என்றும் ஆண்டியாகடவத்த முஸ்லிம் மகா வித்தியாலயமெனவும் அழைக்கப்பட்டது. 2009 ஆம் ஆண்டு அல்-ஹிக்மா மகா வித்தியாலயமென பெயர் மாற்றம் பெற்றது.

எனது பாடசாலையில் 1957 ஆம் ஆண்டு க.பொ.த. (சா/த) வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. தற்போது இங்கு 350 மாணவர்களும் 19 ஆசிரியர்களும் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். கல்வியில் சிறந்து விளங்கும் எமது பாடசாலை சிறந்த பல கல்விமான்களை படைத்த பெருமையுடையது.

வதூத் ஃபாத்திமா, அல்-ஹிக்மா மு.வித்., ஆண்டியாகடவத்தை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஜய் வாசகர் மடல்



'நஸ்கா மர்மங்கள்', 'கோபியின் ராட்சதப் புழு', 'கல்வி முகாமைத்துவம்', 'ஷேக்ஸ்பியர் பெயரில் எழுதியவர் எமெலியாவா?', 'ஆபிரிக்க சஞ்சாரம்', 'காய்கறிகளின் கசப்புச் சுவைக்கான காரணம்', 'பற்பசை செயற்படுவது எவ்வாறு?' போன்ற ஆக்கங்கள் உட்பட, நீ தாங்கி வந்த அனைத்தும் அறிவுபூர்வமானவையே! உனக்கு எனது பாராட்டுக்கள்.

**தே.அகிலன், கல்லடி, மட்டக்களப்பு.**

'சபாநாயகர் பதவியின் ஆரம்பம்', 'பிரித்தானியர்கள் இருவரின் ஆபிரிக்க சஞ்சாரம்', 'ஷேக்ஸ்பியர் பெயரில் ஆக்கங்களை உருவாக்கியவர் எமெலியாவா?', 'விண்வெளித் தகவல்கள்' என்பனவற்றை விரும்பி வாசித்தேன். உன்னை நான் தவறாமல் வாங்கி வருகின்றேன். அறிவுத் தகவல்களையும் சுவாரஸ்யமான கதைகளையும் தாங்கி வருவதில் நீயே முதல்வன்.

**பிர்னாஸ் கனி, கோட்டகொடை, வெலிகம.**



பாடசாலைக் கல்விக்கு நீ அதிகம் உதவுகின்றாய். 'வரலாற்றிலிருந்து' தொடங்கி 'இராமாயணம்' வரை ஒவ்வொரு பகுதியிலும் வித்தியாசமான-வாசிக்க ஆவலைத் தூண்டுகின்ற விடயங்களுக்கு உன்னில் பஞ்சமில்லை. 'பிரித்தானியர்களின் ஆபிரிக்க சஞ்சாரம்' எனும் ஆக்கத்தை விரும்பி வாசித்தேன். 'காய்கறிகளின் கசப்புத் தன்மைக்குக் காரணம்', 'தாவரங்களின் தற்காப்புக் கலை', 'தெரிந்துகொள்வோம்', 'சிவனொளிபாதமலை நடைபாதை', 'கோபி பாலைவனத்தின் ராட்சதப் புழு' என்பன சுப்பர். நீ என்றும் எம்மை நாடி வர வேண்டும்.

**அஹமட் சௌஜான், மாராவ, அடுளுகம, பண்டாரகம.**

'வரலாற்றிலிருந்து', 'சபாநாயகர் பதவியின் ஆரம்பம்', 'இராமாயணம்' என்பன எமது பாடசாலைக் கல்விக்குப் பயன்தரக்கூடியவை. 'அறிவுக்கு வளமூட்டும் வாசிப்பு' எனும் ஆக்கம் வாசிப்பின் மகிமையை எமக்குத் தெரியப்படுத்தியது. 'எமலியா' பற்றிய ஆக்கம், அறியாத தகவல்களை எமக்கு வழங்கியது. எமது பாடசாலையில் அதிகமான மாணவர்கள் உன்னை வாங்கிப் பயன்பெறுகின்றனர். ஒப்படைகளுக்கு உன்னிடமிருந்தே அதிகமான விடயங்களைப் பெறுகின்றோம். உன்னை ஒருபோதும் மறக்கமாட்டோம்.

**த்ரீ ஸ்டார் நண்பிகள், கொத்மலை வீதி, நாவலப்பிட்டி.**

விஜய்யில் வரும் அனைத்து விடயங்களும் என்னைக் கவர்ந்தவை. 'வாரம் ஒரு நாடு', 'விண்வெளித் தகவல்கள்', 'தெரிந்துகொள்வோம்', 'பரட்டைத்தலைப் பவளம்', 'இராமாயணம்' என்பனவற்றை நான் விருப்பத்தோடும் ஆவலோடும் வாசிக்கின்றேன். 'விண்வெளித் தகவல்கள்' விஞ்ஞான பாடத்திற்கு உகந்தவை.

**எஸ்.சதீஸ்குமார், விக்டன் எஸ்டேட், ரொசல்ல.**

வற்றாத அறிவு ஊற்றாய் வாரம்தோறும் எம்மை நாடி வருகின்றாய். உன்னில் பிரசுரமாகியிருந்த 'நஸ்கா மர்மங்கள்', 'வாரம் ஒரு நாடு', 'தயிராக மாறும் பால்', 'ராட்சதப் புழு' என்பவை பிரமாதம்.

**நிஸார் எம்.ஸப்ரான், பொத்துவில் மத்.கல்., பொத்துவில்.**

விஜய்யே! நீ தாங்கி வருகின்ற அனைத்து ஆக்கங்களும் போட்டிகளும் கல்விக்கு உறுதுணையாக இருக்கின்றன. 'தேயிலை பயிர்ச்செய்கைக்கு உதவிய சிவனொளிபாதமலை நடைபாதை', 'பிரித்தானியர்கள் இருவரின் ஆபிரிக்க சஞ்சாரம்', கோபி பாலைவனத்தின் ராட்சதப் புழு' போன்றவை உட்பட, கதைகளும் சுவாரஸ்யமானதாகவும் படிப்பினை தருவதாகவும் உள்ளன. மென்மேலும் பல புதிய தகவல்களைத் தருவதற்கு வாழ்த்துகின்றேன்.

**அஸ்கரிய்யா; சாஜிதா, ரைல்வே வீதி, ஓட்டமாவடி.**

'பரட்டைத்தலைப் பவளம்' எனும் தொடர் கதை சுவாரஸ்யமானது. 'கற்றலுக்கான ஆலோசனை', 'சபாநாயகர் பதவியின் ஆரம்பம்' என்பன கல்விக்கு உதவியாக இருக்கின்றன.

**எஃப்.அஸ்கா, புத்தளம் வீதி, பத்துளுஓயா.**

**இந்த இதழில் (13.07.2011) வெளியாகியிருக்கும் ஆக்கங்கள் குறித்து உங்கள் விமர்சனங்களை தபாலட்டையில் மாத்திரம் எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.**

**அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 20.07.2011.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**  வாசகர் மடல், 'விஜய்' த.பெ.எண் 2037, கொழும்பு. 

## அறிவுக்கு விருந்து - 318 விடைகள்

**போட்டி: 1**



**போட்டி: 2**




**போட்டி: 3**



**போட்டி: 4**

கலைமான், இருக்கின்றன, கால்கள்தான், பின்னால், அது, தாண்டிய, மெலிவான

**போட்டி: 5**

1. நண்பன்- பகைவன்
2. மயக்கம் - தெளிவு
3. ரகசியம் - பரகசியம்
4. அழிவு - ஆக்கம்
5. குழிவு - குவிவு

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 318 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
எம்.சுஜாத், செய்லான் வீதி, கல்முனை-03.

**போட்டி: 02**
எம்.சபா, கண்டி வீதி, வறக்காமுறை.

**போட்டி: 03**
ஏ.உமைத், தெளும்புகஹவத்த, அக்குறனை.

**போட்டி: 04**
கி.மதுராந்தகன், குழந்தை யேசு வீதி, மன்னார்.

**போட்டி: 05**
ஜெ.அமிலேஷ், சர்வோதய வீதி, சின்ன ஊறணி.

**பாராட்டுப் பெறுவோர்:**

- ★ எம்.ரொசான், திருகோணமலை.
- ★ ம.விதுர்ஷன், மட்டக்களப்பு.
- ★ ஏ.அஷ்பா, அரநாயக்க.
- ★ லா.கிறிஸ்டினா, சாமிமலை.
- ★ எஃப்.நுஸ்கியா, பன்கொல்லமட.
- ★ யு.லோகேஸ்வரன், கொட்டகலை.
- ★ ந. ஹரிதாசன், கல்முனை.
- ★ நாஸிக் மொஹமட், மாபோல.
- ★ முஸ்னா மஸாஹிர், கலகெதர மடிகே.
- ★ எஃப்.சுலைஹா, வெலிகம.

## எத்தனை வடிவங்கள் உள்ளன? 2



## 1

வட்டத்தினுள் உள்ள எழுத்துக்களைப் பயன்படுத்தி, குறைந்தது 10 சொற்களையேனும் அமைக்க







அற்லஸ் அறிவுக்கு விருந்து 321
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு

## விடுபட்ட எண்களை எழுதி, இடைவெளிகளை நிரப்புக 3




## சரியான விடையில் கோடிடுக 5

1. காகம் (கறையும்/கரையும்)
2. வயல் என்பதன் ஒத்தகருத்து (கழனி/களரி)
3. 80 ஆம் ஆண்டு நிறைவு விழா (அமுதவிழா/பவளவிழா)
4. ஐம்பொறிகளில் அடங்காதது (மெய்/சுவை)
5. கோள் என்பதன் பன்மை (கோட்கள்/கோள்கள்)
6. வயலும் வயல் சார்ந்த இடமும் (குறிஞ்சி/மருதம்)

## ஆறு வித்தியாசங்களில் X அடையாளமிடுக 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அக்கரைப்பற்று-சாகாம வீதியைச் சேர்ந்த ரவீந்திரன்-சசிகலா தம்பதியரின் செல்வப் புதல்வன் யதுஷிகன், 15.07.2011 அன்று தனது மூன்றாவது பிறந்தநாளை வெகு விமர்சையாகக் கொண்டாடவுள்ளார். இவரை, குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அனைவரும் இறைவன் அருளால் பல்கலையும் கற்று, நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.



ஹம்பாந்தோட்டையைச் சேர்ந்த ஹகீம்-ரிஸ்னா தம்பதியரின் செல்வப் புதல்வன் ஹாஷிக் அஹமட், 11.07.2011 அன்று தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்பாக வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல்: பஸ்லினா)



திஹாரியைச் சேர்ந்த ஹாஜாமுஹ்டீன்-பதாரியா தம்பதியரின் செல்வப் புதல்வன் முஹம்மட் அம்ஹர், 02.07.2011 அன்று தனது பத்தாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்பாக வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல்: எஃப்.நுஸ்ஹா)






கம்பளை-இல்லவத்துறையைச் சேர்ந்த ருஷ்தி-சித்தி பாத்திமா தம்பதியரின் செல்வப் புதல்வி பஹ்மா ருஷ்தி, 03.07.2011 அன்று தனது இரண்டாவது பிறந்ததினத்தைக் கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அனைவரும் சிறப்பாக வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல்: எச்.ஏ.ஷகூர்)




(கடந்த வாரத் தொடர்ச்சி)

## அலங்கார வகைகள்

வல் இறுவ: தனியிழைக் கயிறு, பலயிழைக் கயிறு எனும் அலங்காரங்களுக்கு சமமான



வல் இறுவ

அலங்கார வகையாகும். இது துணி, பாய் பின்னலில் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றது.

தீச்சுடர் (கினிதல்ல): இந்த அலங்காரம் தீயின் சுடர்போல



தீச்சுடர் (கினிதல்ல)

ஒளிவட்டமாக அமைக்கப்படுகின்றது. இது நாகதல்ல எனவும் அழைக்கப்படுகின்றது. இந்த அலங்காரம் புத்தரின் உருவங்களில் ஒளிவட்டங்களை அலங்கரிக்கப் பயன்படுத்தப்படுகின்றது. சந்திரவட்டக்கல்லிலும் இந்த அமைப்புக் காணப்படுகின்றது.

கொடிகள் (லியவல): இது தாவரக்கொடி அலங்காரமாகும். இத்தகைய அலங்காரங்கள் பல



கொடிகள் (லியவல)

வடிவங்களில் - பல இடங்களில் காணப்படுகின்றன. மல்லிகை, வல்லிக்கொடி இவற்றில் முக்கியமானதாகும். சுவர்கள், யானைத்தந்தம், சந்திரவட்டக்கல் போன்றவற்றில் இந்த அலங்காரங்கள் காணப்படுகின்றன.

வல்பொட: இது மலர்களைப் போன்ற அலங்காரமாகும்.



வல்பொட

அரக்குவேலைகள், தூண்கள், ஏடுகள், வெள்ளிப்பாத்திர வேலைப்பாடுகளில் இந்த வல்பொட அலங்காரங்களைக் காணலாம்.

அரசமர இலை (போபத்): அரச மர இலைகளைப் போன்று அமைக்கப்பட்டுள்ள அலங்காரமாகும்.



அரசமர இலை (போபத்)

உலோக வேலைகள், தையல் வேலைகள், சமயத்தலங்களில் இத்தகைய அலங்காரங்களைக் காணலாம்.

(தொடரும்)




இ.நியூஜன்,
நெளுக்குளம் க.ம.வித்., வவுனியா.



எஃப்.ஆமிஷா,
பம்மன்ன, நாரங்கொட.






எம்.ஜுனைட்,
அல்-அஷ்ரப் ம.வித்., மாவடிப்பள்ளி.



ம.யதுசினா,
எபட்ஸ்போட் தமிழ் வித்.,
டெஸ்போட்.



எம்.யோகேந்திரபிரசாத்,
தலவாக்கலை த.ம.வித்.,
தலவாக்கலை.



ஜெ.எஃப்.ஜெஸ்லியா,
கனமூலை மு.ம.வித்., மதுரன்குளி.



எஸ்.கிஷான்,
கிறேட்வெஸ்டன் பாலர் பாட.,
தலவாக்கலை.



ஆர்.சதுர்சனன்,
பெருந்தெரு விக்னேஸ்வரா ம.வித்.,
திருகோணமலை.



சி.லக்ஸ்மன்,
ஊவா ஹைலன்ட்ஸ் த.ம.வித்.,
பண்டாரவளை.



எஃப்.நப்லா,
அல்-ஹிக்மா மு.ம.வித்.,
கம்பளை.



எஃப்.ரிஷாதா,
பாத்திமா மு.ம.கல்., புத்தளம்.



வி.புங்கவி,
வி.மகா வித்., முல்லைத்தீவு.

## பிறந்தநாள் வாழ்த்துக்கள் குறித்து கவனத்துக்கு...!

'விழா உலா' பகுதிக்கு பிறந்தநாள் வாழ்த்துக்களை அனுப்புபவர்கள், குறித்த பிறந்தநாள் நிகழ்வுக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் அந்த வாழ்த்துக்கள் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள். தாமதித்துக் கிடைப்பவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராட்டம்

காமுவும் சோமுவும் இரட்டையர்களாகப் பிறந்த கட்டெறும்புகள். அவை உருவத்தில் ஒரே மாதிரியாக இருந்ததால், சில நேரங்களில் அவர்களின் பெற்றோர்களுக்கே, அவர்களை அடையாளம் தெரிவதில்லை. யாராவது ஒருவர், தவறு செய்துவிட்டால், "அது நான் இல்லை. அவன்தான்" என்று ஒருவர் மீது ஒருவர் பழிசுமத்தித் தப்பிக் கொள்வதில் இருவருமே கில்லாடிகள். ஆனால், ஒரு விடயத்தில் மாத்திரம் காமுவுக்கும் சோமுவுக்கும் வித்தியாசம் இருந்தது.

காமு, ஏதாவது ஒன்றை நினைத்துவிட்டால், அதைச் செய்வதில் உறுதியுடன் இருக்கும். தோல்வி ஏற்பட்டாலும் சோர்ந்து போகாமல், விடாது முயற்சிக்கும். ஆனால், சோமு, அப்படியில்லை. முயற்சித்த உடனே அதில் வெற்றி பெற வேண்டும். இல்லை என்றால், சோர்ந்து போய்விடும். பின்னர் யாராவது



'இன்னொரு முறை முயற்சி செய்' என்று தூண்டினால்தான், முயற்சிக்கும். இந்த ஒரு விடயமே அவர்களை அடையாளம் பிரித்துக் காட்டியது.

ஒருநாள் அதைப்பற்றி காமுவும் சோமுவும் விவாதம் செய்துகொண்டே, ஆற்றங்கரையோரமாகச் சென்று கொண்டிருந்தன. "காமு, எம்மால் முடியாது என்கிற ஒரு விடயத்திற்காக முயற்சி செய்து, நமது நேரத்தையும் சக்தியையும் வீணடிப்பதைவிட, அதைச் செய்யாமலேயே விடுவது மேல் இல்லையா?" என்றது சோமு.

அதைக் கேட்ட காமு, "அது எப்படி நம்மால் ஒரு விடயத்தை செய்ய முடியாது என்று முயற்சி பண்ணாமலேயே சொல்ல முடியும்?" என்று திருப்பிக் கேட்டது.

தொடர்ந்து கூறிய காமு "முயற்சி செய்வதால் நேரம் வீணாகிறது, சக்தி வீணடிக்கப்படுகிறது என்று கவலைப்படக்கூடாது. நம்மால் முடிந்தவரை முயற்சி செய்துகொண்டே இருக்கவேண்டும்! அது ஒரு போராட்டமாகவே மாறவேண்டும். நமது முயற்சி ஏனையவர்களுக்கு ஒரு நகைச்சுவைக்குரிய விடயமாக இருந்தாலும்கூட அடுத்தடுத்து நாம் எடுக்கின்ற முயற்சியைக் கண்டு, அவர்களே வியந்து போய்விடுவார்கள். அதற்குப் பின் நாம் நமது முயற்சியில் வெற்றியடைய நமக்காக அவர்களே பிரார்த்தனை செய்வார்கள்" என்றது, பெருமையுடன்.

அவர்கள்,பேச்சில் கவனமாக இருந்ததால், ஆற்றில் திடீரென ஏற்பட்ட வெள்ளப் பெருக்கைக் கவனிக்கவில்லை. அதனால், இரண்டும் ஆற்றுவெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்டன. காமுவும் சோமுவும் அதனை சிறிதும் எதிர்பார்க்கவில்லை. அதனால், நீரில் மூழ்கி மூச்சுத்திணறிப் பின்னர் மேலே வந்தன.

வெள்ளநீரின் வேகத்தைக்கண்ட சோமு, சோர்ந்து போய், நீந்தவும் மறந்தது. அதைக் கவனித்த காமு, "டேய், சோமு மனதைத் தளரவிடாதே, தொடர்ந்து முயற்சி செய், நீரோடு போராடு, நாம் தப்பிக்க ஏதாவது ஒரு வழி கிடைக்கும்!" என்றது.

"ஆனால், ஒரு வழியையும் காணோம். இனியும் முயற்சிப்பது வீண். பேசாமல், இந்த வெள்ளத்தில் மூழ்கி இறக்கவேண்டியதுதான்" என்று மனம் உடைந்து பேசியது, சோமு.

"உயிர் போவது என்றால் போகட்டும். நம் உயிர் போகும் தருணம் போராடித்தான் இறந்தோம் என்ற மன நிறைவாவது இருக்கட்டும். அதோ பார், ஆலமர விழுது. நீரின் மேல் மட்டத்தோடு உரசிக்கொண்டிருக்கின்றது. அதில் ஒட்டிக்கொண்டு, மேலே போய் விடலாம்" என ஊக்கப்படுத்தியது,காமு.

"கரையோரம் இருந்த ஆலமரத்தின் விழுது, ஆற்றின் ஒருபக்கம் யானையின் துதிக்கை போல் தொங்கிக்கொண்டிருந்தது. அந்த வழியாக வெள்ளத்தால் அடித்து வரப்பட்ட இரண்டு கட்டெறும்புகளும் சட்டென அந்த விழுதைப் பிடித்துக்கொண்டு, மேலே ஏறின. சமயோசிதப் புத்தியுடன் முயற்சி செய்தமையால், நொடியில் அவை தப்பித்துக் கொண்டன.

# முதியோர் துணை



தெருவில் பிச்சை எடுத்து வாழும் ஒரு பெரியவருடன் நட்புக் கொண்டிருந்தான் குமார். இதனை அறிந்த குமாரின் அம்மா மாதவி அவனைக் கடுமையாகக் கண்டித்தார். "அந்த மனிதருடன் நீ சேரக்கூடாது. உன்னை கொண்டுசென்று யாருக்காவது விற்றுவிடுவார்" என்று பலமுறை அவனிடம் கூறியும் குமார் அதைக் கேட்பதாக இல்லை.

ஒருநாள் வீட்டிற்கு அந்தப் பெரியவருடன் குமார் வந்தான். அவரைப் பார்த்ததும் குமார்மீது சீறி விழுந்தார் குமாரின் அம்மா.

அதைப் பார்த்த பெரியவர், "அம்மா... உங்க பையன் நல்லவன். அன்பும், இரக்கமும் கொண்டவன். அவனை எனக்கு மிகவும் பிடிக்கும் அதனால்தான் உங்கள் வீட்டுக்கு வந்தேன். என்னை மன்னித்துவிடுங்கள். நான் போகிறேன்" என்று பணிவோடு கூறிவிட்டு பெரியவர் சென்றுவிட்டார். குமாருக்கு தாயின் மீது கோபம் கோபமாக வந்தது.

"என்னம்மா நீங்கள் அவரும் மனுஷன்தானே? நமது உறவினர்கள் அனைவரும் வெளியூர்ல இருக்கின்றார்கள். அப்பாவும் வெளிநாட்டில் இருக்கிறார். என்கிட்ட இந்தத் தாத்தா ரொம்பப் பாசமாக இருக்கிறபடியால்தான் அவரை வீட்டுக்கு கூட்டிவந்தேன். அவரை விரட்டி விட்டீர்களே...." என்று வருத்தப்பட்டான்.

"நீ சின்னப் பையன், உனக்கு ஒன்றும் தெரியாது. யார் என்ன என்று தெரியாமல் நட்பு கொள்ளக்கூடாது" என்று தாயார் சத்தமிடவும் எதையும் காதில் வாங்கிக்கொள்ளாமல் விறுவிறு என வீட்டில் இருந்து வெளியே வந்தான் குமார். சுற்றுமுற்றும் பார்த்த அவன் அருகில் உள்ள பூங்காவுக்குள் நுழைந்தான். அப்போது அங்கிருந்த இளைஞன் ஒருவன் குமாரைத் தன் அருகில் கூப்பிட்டான். குமாரும் அவன் அருகில் சென்றான்.

"தம்பி, இது வெளிநாட்டு பிஸ்கட். சாப்பிடு. மிகவும் சுவையாக இருக்கும்" என்று குமாரிடம் அவன் பிஸ்கட்டைக் கொடுத்தான். அதைப் பார்த்த அங்கிருந்த பெரியவர், அந்த இடத்தை நோக்கி வேகமாக வந்தார்.

"குமார், இந்த பிஸ்கட்டை வீசிவிடு. இதை சாப்பிட்டால் மயக்கம் வரும். இதைக் கொடுத்து உன்னைக் கடத்திச் செல்ல வந்திருக்கிறான்" என்று பெரியவர் சொல்லவும், பிஸ்கட்டைத் தூக்கி எறிந்தான் குமார்.

தனது திட்டம் பிழைத்ததால் பெரியவரை முறைத்துப் பார்த்துவிட்டு, அங்கிருந்து நழுவினான் அந்த இளைஞன். தன்னைக் காப்பாற்றிய பெரியவரின் காலில் விழுந்து கண்ணீர் மல்க நன்றி தெரிவித்தான் குமார்.

அவனின் கரங்களைப் பற்றிய பெரியவர் "தம்பி,

**'அரியவற்று ளெல்லாம் அரிதே பெரியாரைப் பேணித் தமராக் கொளல்'**

என்பது வள்ளுவரின் வாக்கு. அதாவது, பெரியவர்களைப் போற்றி, அவர்களை நமக்கு சுற்றத்தாராக்கிக் கொள்ளல், பெறத்தக்க அரிய பேறுகள் எல்லாவற்றிலும் சிறந்ததாகும். நான் மட்டும் வரவில்லை என்றால், உன்னை அந்த இளைஞன் கடத்திச் சென்றிருப்பானே....' என்று கூறி பெரியவர் அவனைத் தேற்றினார்.

சில நாட்களின்பின் நடந்த சம்பவங்களை அறிந்த மாதவி, தனது தவறை உணர்ந்து பெரியவரிடம் மன்னிப்புக் கேட்டார்.

அன்றுமுதல் பெரியவரும், குமாரும் நெருங்கிய நண்பர்களாக மாறிவிட்டனர்.

# சிந்தித்து செயற்பட்டால்....

காடுமேடெல்லாம் அலைந்து, திரிந்தும் யானைக்கு அருந்த ஒரு சொட்டு நீர்கூடக் கிடைக்கவில்லை. கோடைகாலமாக இருந்ததால், எல்லா நீர்நிலைகளும் வற்றிப்போய்விட்டன.

எனினும், சற்றுத் தூரத்தில் ஒரு கிணறு ஒன்று தென்பட்டதால். அதன் அருகே வந்து எட்டிப் பார்த்தது யானை. அங்கு சிறிதளவு நீர் இருப்பதைக் கண்டது. அதை எப்படிக் குடிப்பது என்று தெரியாமல் தவித்தது.

யானையின் நடவடிக்கையை அங்கிருந்த காகம் ஒன்று பார்த்துக்கொண்டிருந்தது. அது யானையைப் பார்த்து, "யானையாரே, எங்கள் முன்னோர் ஒருவர் ஒரு ஜாடியில் சிறிதளவு நீர் இருப்பதைக் கண்டு, அதனை மேலே வரச்செய்வதற்கு ஜாடியினுள் சிறுசிறு கற்களைப் போட்டு நீரை மேலே வரவழைத்துக் குடித்தார். அவர் ஜாடியில் இருந்த நீரைக் கற்களைப் போட்டு மேலே வரவழைத்ததைப்போல, நீங்களும் கிணற்றில் பெரிய பெரிய கற்களைப் போடுவதன் மூலம் நீரை மேலே வரவழைக்கலாமே?" என்று அறிவுரை கூறியது.



இதைக் கேட்டவுடன், யானையும் பெரிய பெரிய கற்களைக் கொண்டு வந்தது. சிறிதும் தாமதிக்காமல் அவற்றை எல்லாம் கிணற்றில் போட்டது. நீர் மேலே வந்துவிட்டதா? என்று அவ்வப்போது எட்டிப் பார்த்தது. ஆனால், பாவம், யானை. சிறிதளவு தெரிந்த நீர் கூட, இப்போது தெரியவில்லை. நீரெல்லாம் கற்களால் சூழப்பட்டு மூடிக்கிடந்தது.

அப்போது, அங்கே வந்து சேர்ந்தது குட்டியானை. தனது தாயின் செயலைக்கண்டு கோபம் கொண்டது. "ஜாடியில் இருந்த நீருக்கும் கிணற்றில் இருந்த நீருக்கும் உங்களுக்கு வேறுபாடு தெரியவில்லையா? கற்களைப் போட்டால் கிணற்று நீர் எவ்வாறு மேலே வரும்? கயிற்றையும், வாளியையும் தயார் செய்து அல்லவா நீரை மேலே கொண்டு வந்து குடித்திருக்க வேண்டும்! சீ.......ஒரு காகம்.... உங்களை முட்டாளாக்கி விட்டதே" என்று தன் ஆதங்கத்தை தாய் யானையிடம் கொட்டித் தீர்த்தது, குட்டி யானை.

"என் செல்லமே, நீ சொன்னதும்தான் எனக்கு உண்மை புரிந்தது. நான்தான் அவசரப்பட்டு முட்டாள்தனமான காரியம் பண்ணிவிட்டேன். யார் எதைச் சொன்னாலும் அப்படியே நம்பக்கூடாது என்ற பாடத்தை, இப்போது புரிந்துகொண்டேன். காகம் சொன்ன வழி சரியா? தவறா? என்று சிந்தித்திருந்தால், எனக்கு இந்த நிலை ஏற்பட்டிருக்காது" என்ற யானை, மரத்தின் மேல் காகம் இருக்கிறதா? என்று பார்த்தது. நிலைமையைப் புரிந்துகொண்ட காகம் யானைக்கு அஞ்சி தப்பினேன் பிழைத்தேன் என அங்கிருந்து பறக்கத் தொடங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ආයුබෝවන්
## ஆயுபோவன்
## வணக்கம்

இன்றைய பாடத்தில் 'புகைத்தல்' பற்றிய சிறு கட்டுரையைப் பார்போம்

### දුම්බීම

1. දුම්බීමෙන් බොහෝ හානි සිදුවේ. විශේෂයෙන් එය ශරීරයට අහිතකරය.
2. ක්ෂය රෝගය, පිළිකා වැනි රෝග සෑදීමට ද හේතු වේ.
3. දුම්පානය ශ්වසන පද්ධතියට විශාල ලෙස බලපායි.
4. මහජනයා ගැවසෙන ස්ථානවල දුම්බීම තහනම් කර ඇත.
5. දුම විහිදී අන් අයට ද හානි සිදු කරයි.
6. දුම්බීමෙන් ශරීර සෞඛ්‍යයට හානි සිදු වෙනවා පමණක් නොව; මුදල්ද නාස්ති වේ.

### தும்பீம

1. தும்பீமென் பொஹோ ஹானி சிதுவே. விஷேஷயென் எய ஷரீரயட்ட அஹிதகரய.
2. க்ஷய ரோகய, பிளிகா வெனி ரோக சேதிமடத ஹேது வே.
3. தும்பானய ஷ்வசன பத்ததியட்ட விஷால லெச பலபாய்.
4. மஹஜனயா கெவசென ஸ்தானவல தும்பீம தஹனம் கர எத.
5. தும் விஹிதி அன் அயடத ஹானி சிது கரய்.
6. தும்பீமென் ஷரீர சௌக்யட்ட ஹானி சிதுவெனவா பமணக் நொவ; முதல்த நாஸ்தி வே.

### புகைத்தல்

1. புகைத்தலால் அதிக தீங்குகள் விளைகின்றன. பிரதானமாக அது உடல் நலத்தைப் பாதிக்கிறது.
2. காசநோய், புற்றுநோய் போன்ற நோய்கள் உண்டாக ஏதுவாக இருக்கிறது.
3. புகைத்தல் சுவாசப்பையைப் பெரிதும் பாதிக்கின்றது.
4. மக்கள் அதிகமாக உள்ள இடங்களில் புகைத்தல் தடை செய்யப்பட்டுள்ளது.
5. புகை பரவி ஏனையவர்களுக்கும் தீங்கு விளைவிக்கின்றது.
6. புகைத்தலால் உடல் நலம் கெடுவது மட்டுமன்றி; பணமும் விரயமாகின்றது.

### பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க**

i. புகைத்தலால் அதிக தீங்குகள் விளைகின்றன.
..........................................................................................

ii. புகைத்தல் சுவாசப்பையைப் பாதிக்கின்றது.
..........................................................................

iii. மக்கள் அதிகமாக உள்ள இடங்களில் புகைத்தல் தடை செய்யப்பட்டுள்ளது.
..........................................................................



**இடைவெளிகளை நிரப்புக**

1. දුම්බීමෙන් බොහෝ ........................................................ සිදුවේ.
2. .................................... ශ්වසන පද්ධතියට විශාල ලෙස බලපායි.
3. දුම ........................................................ අන් අයට ද හානි සිදු කරයි.
4. දුම්බීමෙන් මුදල්ද ........................................................ වේ.




'Will be' எனும் எதிர்கால வினைச்சொல்லுடன், நிகழ்கால எச்சவினை (Present Participle) அதாவது 'ING' சேர்ந்த வினைச்சொல் சேர்ந்து உருவாகும் வாக்கியம், 'எதிர்கால தொடர் வாக்கியம்' ஆகின்றது. அவற்றை மேலும் இங்கே பயில்வோம்.

(அ) நாளை இந்த நேரம், ரொஹான் பேருந்து ஒன்றில் பயணித்துக்கொண்டு இருப்பான்.
Tomorrow at this time, Rohan will be travelling in a bus.
(எதிர்கால தொடர் வாக்கியம்-Future Continuous Tense)

- ரொஹான் பயணித்துக்கொண்டு இருப்பான்.
Rohan will be travelling.

(ஆ) நாளை இந்த நேரம், ரோஹினி தொலைக்காட்சி பார்த்துக்கொண்டு இருப்பாள்.
Tomorrow at this time, Rohini will be watching television.
(எதிர்கால தொடர் வாக்கியம்-Future Continuous Tense)

- ரோஹினி பார்த்துக்கொண்டு இருப்பாள்.
Rohini will be watching.

(இ) நாளை காலை வரை, இந்த நாய் வீட்டைக் காவல்செய்துகொண்டு இருக்கும்.
Till tomorrow morning, this dog will be guarding the house.
(எதிர்கால தொடர் வாக்கியம்-Future Continuous Tense)

- இந்த நாய் காவல்செய்துகொண்டு இருக்கும்.
This dog will be guarding.

(ஈ) எனது சகோதரன் உனக்காகக் காத்துக்கொண்டு இருப்பான்.
My brother will be waiting for you.
(எதிர்கால தொடர் வாக்கியம் -Future Continuous Tense)

(உ) நாளை காலை எனது சகோதரி சமைத்துக்கொண்டு இருப்பாள்.
Tomorrow morning my sister will be cooking.
(எதிர்கால தொடர் வாக்கியம்-Future Continuous Tense)

(ஊ) எனது தந்தை பத்திரிகை வாசித்துக்கொண்டு இருப்பார்.
My father will be reading the newspaper.
(எதிர்கால தொடர் வாக்கியம் -Future Continuous Tense)

(எ) எனது தாய் வானொலியை செவிமடுத்துக்கொண்டு இருப்பார்.
My mother will be listening to the radio.
(எதிர்கால தொடர் வாக்கியம்-Future Continuous Tense)

(ஐ) அந்தச் சிறுவர்கள் வலைப்பந்து விளையாடிக்கொண்டு இருப்பார்கள்.
The children will be playing netball.
(எதிர்கால தொடர் வாக்கியம்-Future Continuous Tense)

- எனது சகோதரன் காத்துக்கொண்டு இருப்பான்.
My brother will be waiting.
- எனது சகோதரி சமைத்துக்கொண்டு இருப்பாள்.
My sister will be cooking.
- எனது தந்தை வாசித்துக்கொண்டு இருப்பார்.
My father will be reading.
- எனது தாய் செவிமடுத்துக்கொண்டு இருப்பாள்.
My mother will be listening.
- அந்தச் சிறுவர்கள் விளையாடிக்கொண்டு இருப்பார்கள்.
The children will be playing.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்லாந்து தேர்தலில் 'யிங்லக்' வெற்றி



தாய்லாந்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் முன்னாள் பிரதமர் தக்ஷின் ஷினவட்ரா வின் கட்சி பெரு வெற்றி பெற்றுள்ளது.

தக்ஷின் ஷினவட்ரா வெளிநாட்டில் அடைக்கலம் புகுந்துள்ள நிலையிலேயே அவரது கட்சி சார்பாக அவரின் சகோதரியான 'யிங்லக்' இத்தேர்தலில் வெற்றியீட்டியுள்ளார்.

2006 ஆம் ஆண்டில் தாய்லாந்தில் இராணுவப் புரட்சியின்மூலம் அப்போதைய பிரதமராக இருந்த தக்ஷின் ஷினவாட்ரோ அப்பதவியிலிருந்து பலாத்காரமாக வெளியேற்றப்பட்டிருந்தார். இதனால், தக்ஷின் தாய்லாந்திலிருந்து வெளியேறி டுபாயில் அடைக்கலம் புகுந்திருந்தார். இத்தகைய நிலையிலேயே, ஜூலை 3 ஆம் திகதி நடைபெற்ற தேர்தலில் தக்ஷின் ஷினவாட்ரோவின் கட்சியில் அவரது சகோதரியே போட்டியிட்டிருந்தார். எனவே, தக்ஷின் மீதான மக்களின் அபிமானத்தின் காரணமாக, அவரது சகோதரி 'யிங்லக்' அமோக வெற்றியீட்டியுள்ளார். தேர்தலில் தோல்வியுற்ற அப்ஹிஸித் வெஜ்ஜிவா தனது தோல்வியை ஒப்புக்கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

500 ஆசனங்களைக் கொண்ட நாடாளுமன்றில் 265 ஆசனங்களை ஷினவாட்ரோவின் சகோதரியின் 'பூதாய்' கட்சி வெற்றியீட்டியுள்ளதுடன், பிரதான எதிர்க்கட்சி 159 ஆசனங்களையே வெற்றிகொள்ள முடிந்தது.



அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

## அற்லஸ் கேள்வி - 316

**கேள்வி:** தாய்லாந்து பொதுத் தேர்தலில் வெற்றிபெற்றுள்ள கட்சியின் பெயர் என்ன?

சரியான விடை..................................

உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 316,
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.

### போட்டி இல - 314 இன் சரியான விடை: 4.5 வீதம்

**பரிசு பெறுவோர்**

கனகசபாபதி வுதுஷா,
பிரதான வீதி, டிக்கோயா.

ஆர்.சச்சிந்திரன்,
சென் ஜோசப் வீதி,
கொழும்பு-14.

என்.நுஸ்ரியா,
சின்ன முஹிதீன் பள்ளிவீதி, யாழ்ப்பாணம்.

# ஜப்பான் கடற்பரப்பில் சீன கப்பல்கள்



ஜப்பானின் தெற்குப் புறத்தே காணப்படுகின்ற 'ஒக்கினவா' என்ற தீவுக்கருகாமையில் சர்வதேச கடல் பரப்பில் சீனாவின் போர்க்கப்பல்கள் சில காணப்படுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இதனை ஜப்பானின் பாதுகாப்புத்துறை அமைச்சரும் உறுதிப்படுத்தியுள்ளார். இருப்பினும் இதுவரையில் இது தொடர்பாக ஜப்பானிய அரசாங்க தரப்பில் உத்தியோகபூர்வமாக எந்தவொரு புகாரும் முன்வைக்கப்படவில்லை.

இருப்பினும் இந்த இரண்டு நாடுகளும் இந்த விடயம் காரணமாக, முறுகல் நிலையில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சீனாவின் கிழக்குக் கடற்பரப்பில் காணப்படுகின்ற சிறிய தீவொன்றிற்கு உரிமை கோரும் பிரச்சினை இரண்டு நாடுகளுக்குமிடையே நீண்டகாலமாக நிலவி வருவதால் எந்தவொரு சந்தர்ப்பத்திலேனும் இது மோதலாக மாறிவிடக்கூடிய வாய்ப்பு இருப்பதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

# கல்வி அறிவின் மூலமாக புற்றுநோயை கட்டுப்படுத்தலாம்?

## அமெரிக்காவில் ஆய்வுகள்

அமெரிக்காவில் புற்றுநோய் ஆய்வு அமைப்பினால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் மூலம் கல்வி அறிவை மக்களுக்கு அதிகளவில் கொடுப்பதன்மூலம் புற்றுநோயைக் கட்டுப்படுத்த முடியும் என்று கண்டறியப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகப் பட்டதாரிகளிடையே புற்றுநோய்க்கு ஆளாகியிருப்போரின் விகிதாசாரம் கணிசமான அளவில் குறைந் திருப்பதாக இந்த ஆய்வை மேற்கொண்டுள்ள அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.



1990 ஆம் ஆண்டின் முன் அரையாண்டு காலப்பகுதியுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் 2010 ஆம் ஆண்டில் கணிசமான அளவில் புற்றுநோயா ளர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது.

இதற்கமைய, மக்கள் மத்தியில் போதிய கல்வி அறிவைப் போதிப்பதன்மூலம் புற்றுநோயாளர்களின் எண்ணிக்கையை கட்டுக்குள் கொண்டுவர முடியும் என்று அமெரிக்காவின் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். இது எந்தளவிற்கு சாத்தியமாகக்கூடியது என்பது குறித்த மேலதிக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# தெரிந்து கொள்வோம்



* 1994 ஆம் ஆண்டு பிரிட்டன் அரசாங்கம் ஒரு நாட்டின் ஜனாதிபதிக்கு கௌரவ 'சேர்' பட்டத்தினை வழங்கிக் கௌரவித்தது. ஆனாலும், அந்த கௌரவ 'சேர்' பட்டத்தினை திரும்பப் பெறுவதாக 2008 ஆம் ஆண்டு அறிவித்தது. இந்த நிகழ்வுக்கு ஆளாகிய ஜனாதிபதியின் பெயர் என்ன?
  சிம்பாப்வே ஜனாதிபதி ரொபட் முகாபே



* ஒலிம்பிக் விளையாட்டானது 4 ஆண்டுகளுக் கொருமுறை நடைபெறுகின்றது. அந்தவகையில் இதுவரை நடைபெற்ற அனைத்து ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளிலும் பங்குபற்றிய நாடுகள் எவை?
  அவுஸ்திரேலியா மற்றும் கிரேக்கம்



* இந்தியாவில் முதன்முதலில் பல்கலைக்கழகம் தோற்றம்பெற்றது எங்கே?
  கொல்கத்தா



* இந்திய தேசத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் மகாத்மா காந்தி ஆவார். காந்தி அவர்களுக்கு 'மகாத்மா' என்ற பட்டத்தினை சூட்டிய பெருமைக்குரியவர் யார்?
  இரவீந்திரநாத் தாகூர்



* ஹொக்கி விளையாட்டில் ஒரு அணியில் எத்தனை வீரர்கள் பங்குபற்றுகின்றனர்?
  11 பேர்



* ஒபெக் அமைப்பானது ஸ்தாபிக்கப்பட்டது எத்தனையாம் ஆண்டிலாகும்?
  1960 ஆம் ஆண்டு
* கூட்டுறவு அமைப்பின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?
  றொபட் ஓவன்
* சர்வதேச மன்னிப்புச் சபையின் தலைமையகம் எங்கே அமைந்துள்ளது?
  இங்கிலாந்து, லண்டன் நகரில்



* 2009 ஆம் ஆண்டு ஒரு நாடானது பிச்சை எடுத்தலை தனது நாட்டில் முற்றாகத் தடைசெய்தது. அந்த நாடு எது?
  பங்களாதேஷ்
* இந்திய மக்களவையின் முதல் பெண் சபாநாயகர் என்ற பெருமைக்குரியவர் யார்?
  மீரா குமார்



* 'பொற் கதவின் நகரம்' என அழைக்கப்படும் உலகின் பிரசித்தி பெற்ற நகரம் எது?
  அமெரிக்காவின் சான் பிரான்ஸ்சிஸ்கோ நகரம்
* சர்வதேச எழுத்தறிவு தினம் எப்போது அனுஷ்டிக்கப்படுகின்றது?
  செப்டம்பர் 8 ஆம் திகதி



* உலகிலுள்ள பிரதானஆறுகளில், அதிகளவான நீரினை கடலில் சேர்க்கின்ற ஆறு எது?
  அமேசன் ஆறு



* பனாமா கால்வாய் உடன் தொடர்பு படுகின்ற சமுத்திரங்கள் எவை?
  அத்லாண்டிக் மற்றும் பசுபிக்



* KLM என்பது எந்த நாட்டினுடைய பிரதான விமான சேவை நிறுவனமாகும்?
  நெதர்லாந்து (ரோயல் டச்சு எயார்லைன்ஸ்)

தொகுப்பு: கே.கே.லோகநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை பிரிமியர் லீக் போட்டிகள் ஒத்திவைப்பு



இலங்கையில் இம்மாதம் 19 ஆம் திகதி நடைபெற ஏற்பாடாகியிருந்த பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டிகள் ஓகஸ்ட் மாதத்திற்கு ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டிருந்த திட்டத்தின்படி, 30 வெளிநாட்டு வீரர்கள் இப்போட்டிகளில் கலந்துகொள்வர் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் அவர்கள் பெருமளவு பணத்தை இதற்கு கோரியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. எனவே, இலங்கை கிரிக்கெட் சபையில் காணப்படும் நிதி நெருக்கடியில் இது சாத்தியப்படாது என்றே அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதுமட்டுமன்றி, இப்போட்டிகளுக்கு இந்தியா தனது வீரர்களை அனுப்பாது என்ற தீர்மானமும் கூட இப்போட்டிகளை சோபையிழக்கச் செய்திருந்தது.

ஆகவே, ஒட்டுமொத்த தீர்மானமாக இப்போட்டியில் இலங்கை வீரர்கள் மட்டுமே கலந்துகொள்வர் என்றும் முன்னதாக தெரிவிக்கப்பட்டிருந்த நிலையிலேயே தற்போது இப்போட்டிகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அதிரடியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

SLPL 2011

International Cricket Council

## ஐ.சி.சி.தலைவர் தெரிவு முறையில் இழுபறி நிலை

சர்வதேச கிரிக்கெட் சபையின் தலைவரை தெரிவு செய்யும் முறை குறித்தான இறுதி முடிவெடுத்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுவாக தலைவர் தெரிவு முறையானது, சுழற்சி முறையிலான தெரிவு முறையாகவே அமைந்திருந்தது. அதற்கமைய, தற்போதைய தலைவர் பதவி இந்தியாவிற்கு வழங்கப்பட்டுள்ள அதேவேளை, சுழற்சி முறையின்படி அடுத்த வாய்ப்பு பாகிஸ்தானுக்கே வழங்கப்படல் வேண்டும். ஆனால், பாகிஸ்தானுக்கு அந்த வாய்ப்புப் போவதை தடுக்கும் நோக்கில் தெரிவு முறையில் மாற்றம் செய்வது தொடர்பாக ஆராயும் பொருட்டு ஹொங்கொங்கில் நடைபெற்ற வருடாந்த பொதுக் கூட்டத்தில் பேசப்பட்டபோது, பலத்த கருத்து முரண்பாடுகள் எழுந்துள்ளன. இதன் காரணமாகவே, இது தொடர்பான தீர்மானம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## விம்பிள்டன் ஆடவர் செம்பியன் 'ஜெகோவிச்'



லண்டனில் நடைபெற்ற விம்பில்டன் டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் பிரிவில் சேர்பியாவின் ஜெகோவிச் செம்பியன் பட்டத்தை வென்றுள்ளார். மேற்படி இறுதிப் போட்டியில் ஸ்பெயின் நாட்டின் ரஃபால் நடால், சேர்பியாவின் ஜெகோவிச் ஆகிய இருவரும் மோதினர்.

போட்டியில் முதல் இரண்டு 'செட்'களையும் ஜெகோவிச் 6-1, 6-1 என்ற கணக்கில் வென்றிருந்த அதேவேளை, மூன்றாவது செட்டை நடால் 1-6 என்ற கணக்கில் வென்ற போதிலும் நான்காவது செட்டில் சமயோசிதமாக விளையாடிய ஜெகோவிச் 6-3 என அதில் வெற்றியீட்டியமையால் கூடிய 'செட்களில்' வெற்றியீட்டி செம்பியன் கிண்ணத்தை கைப்பற்றினார்.

விம்பிள்டன் பட்டத்தினை ஜெகோவிச் பெற்றது இதுவே முதல் தடவையாகும். இந்த ஆண்டில் இதுவரை ஜெகோவிச் விளையாடியுள்ள 51 போட்டிகளில் 50 போட்டிகளில் வெற்றியீட்டியுள்ளமையும், டென்னிஸ் ஆடவர் தரப்பட்டியலில் இவரே முதலாவது இடத்தை வகிக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.



## இந்திய தேர்வுக் குழுவின் பணிக் காலம் நீடிப்பு

இந்திய கிரிக்கெட் அணியின் தேர்வுக் குழுவின் பணிக்காலம் மேலும் ஒரு வருடத்தால் நீடிக்கப்பட்டுள்ளது. இந்த நீடிப்பை இந்திய கிரிக்கெட் சபையே வழங்கியுள்ளது.

முன்னாள் வீரர் ஸ்ரீகாந்த் தலைமையிலான தேர்வுக் குழுவின் பணிக்காலத்திலேயே இந்திய அணி இம்முறை உலகக் கிண்ணத்தை வெற்றியீட்டியுள்ளதுடன், டெஸ்ட் தரப்பட்டியலிலும் முதலாம் இடத்தைப் பெற்றது. மேற்படி சிறந்த பெறுபேறுகளின் அடிப்படையிலேயே தேர்வுக் குழுவின் பணிக்காலம் நீடிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.



## கிரிஸ் கெயில் vs கிரிக்கெட் சபை இழுபறி தொடர்கின்றது



மேற்கிந்திய தீவுகளின் கிரிஸ் கெயிலுக்கும் அந்நாட்டின் கிரிக்கெட் சபைக்கும் இடையேயான கருத்து முரண்பாடுகள் மேலும் தொடர்ந்தவாறே இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனால், கெயில் அண்மைக்காலமாக, பல போட்டிகளிலிருந்து ஒதுக்கப்பட்டு வருகின்றார். இது விடயமாக, கிரிஸ் கெய்லும் அதிருப்தியுடனேயே உள்ளார். இது குறித்து கருத்துத் தெரிவித்துள்ள கெயில், அனைவரும் ஒன்று சேர்ந்து தனது எதிர்காலத்தைப் பாழ்ப்படுத்த நினைப்பதாகவும், அதற்கு முன்னதாக தானாகவே ஏதேனும் மாற்று வழிகளை தேடவேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு பதிலளித்துள்ள கிரிக்கெட் சபை, கிரிஸ் கெயிலுடன் நட்புறவாகப் பணியாற்ற எவ்வளவு முயற்சித்தாலும் அவர் முரண்பட்ட விதத்திலேயே நடந்துகொள்கின்றார், அவருக்கு நாம் ராஜ மரியாதை வழங்கவேண்டும் என்று அவர் எதிர்பார்ப்பது சாத்தியமாகாது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## விம்பிள்டன் மகளிர் செம்பியன் பெட்ரா



இம்முறை விம்பிள்டன் மகளிர் செம்பியன் பட்டத்தை 'செக்' குடியரசின் பெட்ராகிவிட்டோவா கைப்பற்றியுள்ளார். மரியா ஷரபோவாவை தோற்கடித்தே இவர் இறுதிப் போட்டியில் செம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மகளிருக்கான மேற்படி இறுதிப் போட்டிகளில் ரஷ்யாவின் மரியா ஷரபோவா, செக் குடியரசின் பெட்ரா கிவிட்டோவா ஆகியோர் மோதினர். இதில் முன்னாள் செம்பியன் ஷரபோவாவை 6-3, 6-3 என்ற நேர் செட் கணக்கில் 'பெட்ரா' வெற்றிகொண்டு விம்பிள்டன் பட்டத்தை வெற்றியீட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேகமாக வந்த 'விண்துகள்' 'ISS' ஐக் கடந்து சென்றது




விண்வெளியில் மணிக்கு 29 ஆயிரம் மைல் வேகத்தில் வந்த விண்துகளொன்று சர்வதேச விண்வெளி மையத்தை (International Space Station - ISS) அண்மித்ததாக ஜூன் 28 ஆம் திகதி கடந்து சென்றது. இதனால், விண்வெளி மையத்துக்கும் அதில் தங்கியிருந்த ஆறு விண்வெளி வீரர்களுக்கும் ஏற்பட இருந்த பாதிப்புகள் தவிர்க்கப்பட்டன.

எனினும், செயல் இழந்து விண்ணில் சுற்றிக்கொண்டிருக்கும் ஏராளமான செயற்கைக்கோள்களால் சர்வதேச விண்வெளி மையத்துக்கு ஆபத்து ஏற்படும் அபாயம் உள்ளது. அதன்படி, பழைய செயற்கைக்கோளின் மோட்டார் ஒன்று, விண்வெளி மையத்துக்கு மிக அருகே 2009 ஆம் ஆண்டு மார்ச் 12 ஆம் திகதி கடந்துசென்றது. இந்த நிகழ்வானது விண்வெளி வீரர்களைப் பீதியில் ஆழ்த்தியது. இதே போன்ற சம்பவம் ஒன்றுதான் கடந்த ஜூன் மாதம் 28ஆம் திகதி நடந்தது.



நாஸாவின் கட்டுப்பாட்டு அதிகாரி லார்க் ஹோவர்த் என்பவர் இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில்:

"விண்துகள் ஒன்று மணிக்கு 29 ஆயிரம் மைல் வேகத்தில் விண்வெளி மையத்தை நெருங்கி வந்தது. இது பற்றிய எச்சரிக்கையை 15 மணித்தியாலங்களுக்கு முன்னதாகத்தான் நாஸா கட்டுப்பாட்டு மையத்தின் விஞ்ஞானிகள் சர்வதேச விண்வெளி மையத்திலிருந்த விண்வெளி வீரர்களுக்குத் தெரிவித்தனர். இதனை அடுத்து, அங்கிருந்த வீரர்கள் அனைவரும் விண்வெளி மையத்தில் ஏதேனும் ஆபத்து ஏற்படும்வேளையில், தங்களைக் காப்பாற்றிக்கொள்வதற்காக, அங்கு எப்போதும் தயார் நிலையில் இருக்கும் இரண்டு விண்கலங்களில் ஏறிக்கொண்டனர். ஆபத்துகளிலிருந்து தப்பித்து பூமி திரும்பும் வகையில் இந்த விண்கலங்கள் உள்ளன. ஆனால், அவர்களுக்கு எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்தாவண்ணம் சர்வதேச விண்வெளி மையத்திலிருந்து சுமார் 250 மீற்றர் இடைவெளி இருக்கும் வகையில் அந்த விண்துகள் கடந்து சென்றது. அதன்பின் விண்வெளி வீரர்கள் தங்களின் இயல்பான பணிக்குத் திரும்பினர்" என்றார்.

# பூமியைக் கடந்துசென்ற 2011 MD விண்கல்



'2011 எம்டி' என்ற விண்கல் (asteroid) பூமியிலிருந்து சுமார் 7,600 மைல் தொலைவில் கடந்து சென்றது. இந்த விண்கல் பூமியைக் கடந்து செல்லவுள்ளமை ஏற்கனவே தெரிவிக்கப்பட்டபோதிலும், எதிர்பார்க்கப்பட்ட நேரத்திலிருந்து மூன்றரை மணித்தியாலங்கள் தாமதித்தே அது பூமியைக் கடந்து சென்றுள்ளதாக வானியலாளர்கள் தெரிவித்தனர்.

கடந்த ஜூன் மாதம் 27 ஆம் திகதி இந்த விண்கல் அட்லாண்டிக் சமுத்திரத்திற்கு மேலாக பூமிக்கு எவ்வித சேதமும் ஏற்படுத்தாமல் கடந்து சென்றது. ஜூன் 21 ஆம் திகதி நியூ மெக்சிக்கோ, சொக்கோரோ என்ற இடத்தில் உள்ள விண்தொலைநோக்கிமூலம் வானியலாளர்கள் இதனைக் கண்டறிந்தனர்.

82 அடி அகலம் கொண்ட 2011 எம்டி என்ற மேற்படி விண்கல், தாம் கணித்த பாதையிலேயே பூமியைக் கடந்துள்ளதாக நாஸா கூறியுள்ளது. அளவில் பருமனான இந்த விண்கல், சுமார் ஆறு ஆண்டுகளுக்கு ஒருமுறை பூமியை அண்மிக்கின்றது. இவ்வாண்டின் ஆரம்பத்தில், இதனைவிட அளவில் சிறிய விண்கல் ஒன்று 3,500 மைல் தூரத்தில் பூமியைக் கடந்து சென்றுள்ளது. 2011 எம்டி பூமியை நோக்கி வந்திருந்தாலும், அது வளிமண்டலத்திலேயே முழுமையாக எரிந்திருக்கும் எனவும் பூமியில் சேதம் எதனையும் ஏற்படுத்தியிருக்காது எனவும் நாஸா தெரிவித்துள்ளது.

"கடந்த மில்லியன் ஆண்டுகளாக பூமியை இவ்வாறான விண்கற்கள் தாக்கி வருகின்றன. மூன்றில் இரண்டு மைல் பருமனான விண்கற்கள் மிகவும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும். இவ்வாறானவை பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு ஒரு முறையே பூமியைத் தாக்குகின்றன. 65 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் பூமியில் வாழ்ந்த டைனோஸர்களின் அழிவுக்குக் காரணம், இத்தகைய விண்கற்களே என நம்பப்படுகின்றது. எனவே,





வானியலாளர்கள் இவற்றை எந்நேரமும் கண்காணித்துக்கொண்டே இருக்கின்றனர். இதுவரையில் பூமியை நோக்கி வந்துள்ள 8,110 சிறுகோள்கள் மற்றும் வால்வெள்ளிகளை நாஸா அவதானித்துள்ளது. இவற்றில், 1,237 விண்பொருட்கள் பூமியில் பெரும் அழிவுகளை ஏற்படுத்தக்கூடியவை எனக் கணிக்கப்பட்டுள்ளது" என கலிஃபோர்னியாவைச் சேர்ந்த நாஸா வானியலாளர் டொன் யோமன்ஸ் தெரிவித்துள்ளார்.

# முன்னாள் விண்வெளி வீரருக்கு எதிராக நாஸா வழக்குப் பதிவு

அமெரிக்காவின் முன்னாள் விண்வெளி வீரரும் சந்திரனில் கால் பதித்த ஆறாவது மனிதருமான எட்கார் மிச்சேல் மீது அமெரிக்க விண்வெளி நிறுவனமான நாஸா, கடந்த ஜூன் மாதம் 30 ஆம் திகதி வழக்குப் பதிந்துள்ளது. எட்கார் மிச்சேல், தான் கலந்து கொண்ட அப்பலோ 14 விண்வெளிப் பயணத்தில் நிலவின் மேற்பரப்பில் இறங்கியபோது, அங்கு பயன்படுத்திய படப்பிடிப்புக் கருவி ஒன்றை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு முயற்சி செய்கிறார் என நாஸாவுக்கு அறியக்கிடைத்ததை அடுத்தே, அவருக்கு எதிராக மியாமி நகர நடுவன் நீதிமன்றத்தில் இவ்வழக்கை நாஸா பதிந்துள்ளது.




எட்கார் மிச்சேல் அன்றும் இன்றும்



எட்கார் சந்திரனில் தரையிறங்கிய போது....



எனினும், இந்தக் கெமராவை தன்னுடன் வைத்திருக்க நாஸா தனக்கு அனுமதி வழங்கியிருந்ததாகவும் தனது காலத்தில் விண்வெளி வீரர்கள் தமது பயண நினைவாக சில பொருட்களைத் தமதாக்கிக்கொள்ள அனுமதிக்கப்பட்டனர் எனவும் எட்கார் மிச்சேல் கூறியுள்ளார். அத்துடன், தமக்குத் தேவை ஏற்படின் அவற்றை விற்பனை செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் இக்கருவியைத் தாம் வைத்திருக்காவிட்டால், அதனை நாஸா அழித்திருக்கும் எனவும் நாஸாவுக்கு அது ஒரு கழிவுப் பொருளே எனவும் மிச்சேல் மேலும் கூறியுள்ளார். அப்பலோ 14 பயணத்தின்போது, பயன்படுத்திய இந்தக் கெமரா 80,000 அமெரிக்க டொலர்களுக்கு ஏல விற்பனை செய்யப்படவுள்ளதாக அறியக் கிடைக்கின்றது.



எட்கார் மிச்சேல் வைத்திருக்கும் கெமரா

ஆனால், 'நாஸாவின் பயணங்களில் பாவிக்கப்பட்ட அனைத்துக் கருவிகளும் உடமைகளும் அதிகாரபூர்வமாக, வேறு நிறுவனங்களுக்கு வழங்கப்படாவிட்டால் அவை நாஸாவுக்குச் சொந்தமானவை' என நாஸா தனது வழக்குப் பதிவில் தெரிவித்துள்ளது. அத்துடன், மிச்சேலுக்கு இப்புகைப்படக் கருவி வழங்கப்பட்டதற்கான எவ்வித அதிகாரபூர்வ ஆவணங்களும் இல்லை என நாஸா தெரிவித்துள்ளது.

எட்கார் மிச்சேல், அலன் ஷெப்பர்ட் ஆகியோர் அப்பலோ 14 பயணத்திட்டத்தின்போது, 1971 ஆம் ஆண்டில் சந்திரனில் தரையிறங்கினர். அப்பலோ 14, சந்திரனில் தரையிறங்கிய மூன்றாவது விண்ணோடமாகும். இவர்கள் இருவரும் 33 மணித்தியாலங்களை சந்திரனில் கழித்தனர். ஷெப்பர்ட், மிச்சேல் ஆகிய இருவரும் சந்திரனில் தரையிறங்கிய ஐந்தாவது, ஆறாவது மனிதர்கள் எனப் புகழ் பெற்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணினியில் பணிசெயல் முறையின் தொழிற்பாடு





**கணினியின் செயற்பாட்டுக்குத் தேவையான மென்பொருள் தொகுதியே 'பணிசெயல்' முறைமையாகும். இம்முறைமையின்றி கணினியைப் பயன்படுத்த முடியாது. கணினியைச் செயற்படுத்தும் பணிசெயல் முறைமை தன்னியக்க முறையில் செயற்பட்டு, கணினியைப் பயன்படுத்தத் தேவையான வசதியை அமைக்கின்றது. இன்று அதிகளவில் பயன்படுத்தும் பணிசெயல் முறைமைகளுக்கு உதாரணங்களாக, MS Dos, Windows (XP, ME, Vista, UNIX, Linux, Mac OS ஆகியவற்றைக் குறிப்பிடலாம்**

கணினி மென்பொருள்களையும் வன்பொருள்களையும் முகாமை செய்து செய்நிரல்கள் மற்றும் பயனர்கள் (பயன்படுத்துவோர்) அவ்வளங்களுக்குள்ளே பிரவேசிப்பதற்காக இடைமுகத்தை வழங்குதலே கணினிப் பணிசெயல் முறையின் முக்கிய பணியாகும். கணினி முறைமைக்குரிய அனைத்துத் துணை உறுப்புகளையும் ஒருங்கிணைத்து செயற்படச்செய்து, அவற்றிலிருந்தும் உயர்ந்தபட்ச செயலாற்றுகளைப் பெற தேவையான வசதிகளை வழங்குவதும் இதன் தொழிற்பாடாகும்.

தற்கால கணினி முறைமைக்கும் பயனருக்குமிடையே உள்ள தொடர்பை பின்வரும் மாதிரியுரு காட்டுகின்றது.






| | | |
|---|---|---|
| பயனர் (User) | | |
| வங்கி முகாமை முறைமை | அலுவலக மென்பொருள் | வலைமேலோடி (Web Browser) |
| தொகுப்பிகள் (Compilers) | பதிப்பாளர் (Editors) | Command Interpreters |
| பணிசெயல் முறைமை (Operating System) | | |
| வன்பொருள் (Hardware) | | |





## பணிசெயல் முறைமையின் செயற்பாடு







பணிசெயல் முறைமையின் அடிப்படைச் செயற்பாடானது, நான்கு பகுதிகளைக் கொண்டதாக காணப்படுகின்றது.

### 1. நினைவக முகாமை (Memory Management)

பல்வேறு பணிகளுக்காக நினைவகத்திற்கு இடமளித்தலும் பணிசெயல் முறைமைக்குரிய பணியாகும். ஒரே தடவையில் பல்வேறு முறைவழிகளில் நடைபெறும் சந்தர்ப்பங்களில் அவற்றுக்கிடையே மோதல் ஏற்படாதவாறு பணிசெயல் முறைமையின் மூலம் கணினி நினைவகம் ஒழுங்கு முறையாக முகாமிக்கப்படும். அத்துடன், குறித்தவொரு பணியை முற்றாகச்செய்து முடித்த பின்னர் வேறொரு பணிக்காக, நினைவகத்திற்கு இடமளித்தல், முன்னைய பணிக்காக வழங்கிய நினைவகத்தை விடுவித்தல் போன்ற செயன்முறையே பணிசெயல் முறைமையின் தொழிற்பாடாகும். மேலும், அதிக எண்ணிக்கையான கணினிகளைப் பயன்படுத்துகின்ற சந்தர்ப்பங்களில் ஒவ்வொருவரினதும் பணிகளுக்கு இடையூறு ஏற்படாதவாறு கணினி நினைவகத்தைக் கவனிப்பதும் பணிசெயல் முறையின் பொறுப்பாகும்.











### 2. முறைவழி முகாமை (Process Management)

தற்காலப் பணிசெயல் முறைமைகளின் அடிப்படை எண்ணக்கரு முறைவழிகள் (Processes) ஆகும். செலுத்தப்படுகின்ற செய்நிரல் அறிவுறுத்தலானது (Program Instruction) முறைவழி ஆகும். இவ்வழிக்கான அறிவுறுத்தல் தொகுதிக்கான தரவுகளும், ஏனைய துணை உறுப்புக்கள் உட்பட, மைய முறைவழி அலகு ஆகியவற்றைப் பயன்படுத்துதலாகும். இம்முறைவழிக்காக, பயனர்கள் தரவுகளை விசைப்பலகையின் (Keyboard) மூலமாக அல்லது கோப்பிலிருந்து பெற வேண்டுமெனக் கொண்டால் இப்போது மைய முறைவழி அலகின் முறைவழியாக அக்கதியுடன் ஒப்பிடுமிடத்து தரவு உள்ளீட்டுக்கதி மிக மெதுவாக இருக்கும். இக்காலத்தின்போது, மைய முறைவழி அலகு செயலில் இருக்கும்.

பல்முறைச்செய்நிரப்படுத்தல் (Multiprogramming) நடைபெறுகின்ற சுற்றாடல்களில் இக்காலத்தின்போது, வேறு முறைவழியைத் தொடங்கும் பணி நடைபெறுகின்றது. முதல் முறைவழியின்போது, தரவுகளை உள்ளீடு செய்து முடித்தபின்னர், மறுபடியும் ஆரம்ப முறைவழியின் மிகுதிப்பகுதி செயற்படுகின்றபோது, முறைவழிகளைக் கட்டுப்படுத்தும் பணி நடைபெறுகின்றது. இச்சந்தர்ப்பத்தின்போது, நேரப்பங்கீடு என்கிற முறைவழிக்காகக் கணினி ஒழுங்கமைப்பைத் தொடுத்தல், விடுவித்தல் என்னும் முறைவழி முகாமை பணிசெயல் முறைமையின்மூலம் நடைபெறுகின்றது.




### 3. துணையுறுப்பு முகாமை (Device Management)

கணினிப் பணிசெயல் முறைமையின் மூலம் செய்யவேண்டிய வேறொரு பணியே இதுவாகும். இது பல்வேறுபட்ட துணையுறுப்புக்கள் பலவற்றின் வெவ்வேறு பக்கங்களினூடாக முகாமை செய்ய வேண்டியுள்ளது. கணினி முறைமையின் வன்பொருள் பகுதிகளை (உ+ம் அச்சுப்பொறி, நினைவகத் தேக்கம், தாய்ப்பலகை ) உள்ளடக்கும். துணையுறுப்புக்கள் செயற்படும் கதி, தகவல்களின் அளவு, அவற்றின் நோக்கங்கள், தகவல்பாயும் திசை, தகவல்களை ஊடுகடத்தப் பயன்படுத்தும் வரைகோடுகள் ஆகியனவும் இத்துணையுறுப்பு முகாமையில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

### 4. கோப்பு முகாமை (File Management)

பணிசெயல் முறைமையின்மூலம் கோப்புக்களை ஆக்குதல், ஒழுங்கமைத்தல், பெயரிடுதல், பாதுகாத்தல், அணுகுதல், பயன்படுத்தல் எனும் செயல்களை முகாமை செய்தல் கோப்பு முகாமை' எனப்படும். தகவல்களை சேமிப்பதற்கும் அதனை திரும்பிப் பெறவும், பயன்படுத்தவும் கோப்பு பயன்படுகிறது. இக்கோப்பு முகாமைச் செய்நிரலின்மூலம் கோப்புக்களை ஆக்கவும், நீக்கவும், நகல் செய்யவும், வேறொரு இடத்திற்கு அனுப்பவும், பெயரை மாற்றவும், திரும்பப்பெறவும் வாய்ப்புக்களை வழங்குகிறது.





## பணிசெயல் முறைமையின் நன்மைகள்

- கணினிக்கும் பயனர்களுக்குமிடையே தொடர்பை ஏற்படுத்தும் இடைமுகத்தை வழங்குகின்றது.
- கணினி முறைமையினுள்ளே இருக்கும் ஏனைய மென்பொருள்கள், வன்பொருள்கள், துணையுறுப்புக்கள், நினைவகம், தரவு போன்ற வளங்களை இயைபுபடுத்துவதன்மூலம் கணினியைப் பயன்படுத்துவதற்கான வசதிகளை வழங்குவதில் உதவுகின்றது.
- குறிமுறை (Coding) பற்றிய விளக்கம் இல்லாவிட்டாலும் கணினியைப் பயன்படுத்துவதற்கு உதவுகின்றது.



**பாத்திமா அம்னா மன்சூர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனிதனின் ஆயுள், ஆரோக்கியத்தை நிர்ணயிக்கும் 'சூரியஒளி'

ஒரு மனிதனின் அறிவாற்றல் முதல் அவனது ஆயுட்காலம் வரையான பல்வேறு விடயங்களுக்கும் அவன் பிறக்கும் மாதத்துக்கும் தொடர்புகள் இருப்பதாக ஓர் ஆய்வில் தெரிய வந்துள்ளது. அதாவது, குழந்தை ஒன்று பிறக்கும் காலநிலைக்கும் அந்தக் குழந்தையின் வாழ்நாளுக்கும் உள்ள தொடர்பு குறித்து நிபுணர் குழு மேற்கொண்ட ஆராய்ச்சியின்படி, கருவில் இருக்கும் குழந்தைக்குக் கிடைக்கும் சூரிய ஒளியின் அளவை வைத்தே, அந்த குழந்தையின் ஆயுள் மற்றும் ஆரோக்கியம் நிர்ணயிக்கப்படுகின்றது என இந்த ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

வசந்தகாலத்தில் பிறக்கும் குழந்தைகளுக்கு ஆஸ்துமா, மனவளர்ச்சி குன்றல், மூளை நோய் உள்ளிட்ட பல்வேறு நோய்களால் பாதிக்கப்படும் வாய்ப்புகள் காணப்படுவதாகவும் மேலும், ஒக்டோபர்,நொவெம்பர், டிசம்பர் மாதங்களில் பிறப்பவர்களைவிட ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் பிறப்பவர்களின் வாழ்நாள் குறைவாக இருக்கும் என ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். அமெரிக்காவில் நடத்தப்பட்ட இதுபோன்றதோர் ஆய்வில் வசந்தகாலத்தில் பிறப்பவர்களைவிட, இலையுதிர் காலத்தில் பிறப்பவர்களின் வாழ்நாள் 160 நாட்கள் அதிகமாக இருக்கும் என தெரியவந்துள்ளது.



# நீர் பஞ்சம் தீர்க்கும் ராட்சதப் பனிக்கட்டிகள்



பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பொறியியலாளர் ஜோர்ஜஸ் மௌகின் என்பவர் கடந்த 30 வருடங்களாக ஆர்ட்டிக் பகுதியில் உள்ள மலை போன்ற ராட்சதப் பனிக்கட்டிகளை பயன்படுத்தி நீர் பஞ்சத்தைப் போக்குவது குறித்தான ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார்.

தொழில்நுட்பம் முன்னேறாத அக்காலகட்டங்களில் அவரது முயற்சிக்கு பெரும் தடங்கல்கள் ஏற்பட்டன. ஆனால், தற்போது பிரான்சை சேர்ந்த 'டசால்ட் சிஸ்டம்ஸ்' எனும் நிறுவனம் ஜோர்ஜசின் குறிக்கோளை முப்பரிமாணப் படங்கள்மூலம் நிறைவேற்றியுள்ளது. இதற்கமைய, பனிக்கட்டியின் பயணத்தின்போது, ஏற்படக்கூடிய இயற்கைச் சீற்றங்கள் உள்ளிட்ட பல்வேறு அம்சங்களும் ஆராயப்பட்டுள்ளன. கெனடாவின் நியூபவுண்லேண்ட் என்ற இடத்தில் உள்ள 70 லட்சம் தொன் எடையுள்ள பனிக்கட்டியை ஸ்பெயின் நாட்டின் கேனரி தீவுகளுக்குக் கொண்டு வருவதுதான் இவரது முதல் திட்டம்.

குறைந்த எரிபொருள் செலவில் குறைந்த முயற்சியில் பலனை அடைவதற்கும் இப்படங்கள் வழிகோலுகின்றன. விண்வெளியில் உள்ள செயற்கைக் கோள்கள், பனிக்கட்டியைச் சுற்றி விடப்பட்டுள்ள மிதவைகள், பலூன்கள் இவை மூலம் பனிக்கட்டியின் பயணம் கண்காணிக்கப்படும். அத்துடன், அளவில் சிறிய பனிக்கட்டி ஒன்றை இழுத்துவர 13 கோடி ரூபாயில் இருந்து 20 கோடி ரூபா வரை தேவைப்படுவதால் அந்நிதியைத் திரட்டும் பணியில் ஜோர்ஜஸ் ஈடுபட்டுள்ளார். மேலும், நிதித் திரட்டல் பூர்த்தியானவுடன், அடுத்த வருடம் தனது திட்டத்தை முழுமையாகச் செயற்படுத்தும் நோக்கில் இருக்கிறார் ஜோர்ஜஸ் மௌகின்.



'1935 ஆம் ஆண்டில் ஏற்பட்ட தூசிப்புயல் டெக்சஸாசில் உள்ள வீடுகளை மூடியிருக்கும் காட்சி'

# தூசுப்படலம்

வளிமண்டலத்தில் காணப்படும் தூசுத்துகள்கள் புவியை வந்தடைதல், காற்றினால் மண் காவிச்செல்லப்படல், எரிமலை வெடிப்புக்களால் வெளியேறும் துகள்கள் மேலும் பல்வேறு சேதன, அசேதன பொருட்களின் மாசுகள் போன்றவற்றால் தூசுக்கள் உருவாகின்றன. இவை, வீடு மற்றும் சுற்றுச்சூழல்களின் மண்ணில் இருந்து வரும் கனிமத்துகள்கள், தோற்கலங்கள், தாவரங்களின் மகரந்தம், மிருக உரோமங்கள், துணி இழைகள் மற்றும் ஏராளமான பிறபொருட்களிலும் காணப்படுகின்றன.

வீட்டுச்சூழலில் அதிகளவு தூசுகள் வெளியேற்றப்படுகின்றன. சூழல் காரணிகள், பருவகாலம், வீட்டின் தன்மை அல்லது முதிர்ச்சிநிலை, தளபாடங்கள், வீட்டின் தளவிரிப்புக்களின் அளவு மற்றும் அவற்றின் நிலை போன்றவை வீட்டுத் தூசியின் அளவையும் தன்மையையும் தீர்மானிக்கும் முக்கிய காரணிகளாகும். வீட்டுத்தூசியில் கரிமப்பொருட்களும், கனிமப் பொருட்களும் உள்ளன. எனினும், தூசியில் இவற்றின் விகிதங்கள் பெருமளவு வேறுபட்டுக் காணப்படுகின்றன. சில இடங்களில் ஏறத்தாழ முழுமையாகவே தூக கனிமப் பொருட்களான மணல், களி போன்றவற்றால் ஆனதாக இருக்கும்.

அதேவேளை, பழையதாகிப் போன தளவிரிப்புக்கள் மற்றும் செல்லப்பிராணிகளை வளர்க்கும் வீடுகளின் தூசு பெருமளவு கரிமப் பொருட்களைக் கொண்டிருக்கின்றது. மேலும், வீட்டுக்கு உள்ளேயுள்ள மேற்பரப்புகளில் ஒரு மணித்தியாலத்துக்கு ஒரு சதுரமீற்றர் பரப்பளவில் 1000 தூசுத்துகள்கள் படிவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. சில தூசுகளில் மனிதத் தோல் துகள்கள் உள்ளன. ஒரு மனிதனது தோலின் மேற்படலம் முழுவதும் ஒன்று அல்லது இரண்டு நாட்களில் உரிந்து போவதாக அறிவியலாளர்கள் கூறுகின்றனர். இவ்வாறு ஒரு நிமிடத்துக்கு சுமார் 7 மில்லியன் தோல் துகள்கள் வீதத்தில் வளியில் கலக்கின்றனவாம்.



# அலைகள் ஓய்வதில்லை

கடல் நீர் செங்குத்தாகவும் கிடைமட்டமாகவும் அசைந்துகொண்டே இருக்கின்றது. இதற்கு புவிச்சுழற்சி, புவிச்சுற்றுகை, சந்திரன் மற்றும் சூரியனின் ஈர்ப்பு விசைகளே காரணமாகின்றது. புவி தனது அச்சில் மேற்கு, கிழக்காக தன்னைத்தானே சுற்றுவதை 'புவிச்சுழற்சி' என்பர். அதன்போது, மேற்பரப்பில் உள்ள கடல்கள் அசைவுக்குள்ளாகின்றன.

புவிச்சுற்றுகை என்பது சூரியனைச் சுற்றி வருகின்ற நிலை. அவ்வாறு சுற்றி வரும்போது, மத்திய அகலக்கோட்டில் இரண்டு தடவைகளும் மகர-கடக கோடுகளில் ஒவ்வொரு தடவையும் சூரியன் உச்சம் பெறுகின்றது. சூரியக்கதிர் வீசலில் சாய்வு வேறுபாட்டால், புவிக்குக் கிடைக்கும் வெப்பத்தின் அளவில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. இதனால், ஏற்படும் அமுக்க வேறுபாடுகள் காற்றின் வேகத்திலும் திசையிலும் மாற்றங்களை உண்டாக்குகின்றன. இதனால், காற்றில் உந்துதல் ஏற்பட்டு நீர் அசைகின்றது.

சந்திரன் மற்றும் சூரியனின் ஈர்ப்பு விசைகளால் புவியில் வற்றுப்பெருக்குகள் ஏற்படுகின்றன. நீர்மட்டம் உயர்ந்து தாழ்வதே 'வற்றுப்பெருக்கு' எனப்படுகின்றது. புவி, சந்திரன், சூரியன் ஆகிய மூன்று கோள்களும் அமாவாசை, பௌர்ணமி தினங்களில் ஒரே நேர்கோட்டில் வருகின்றமையால், இக்காலங்களில் வற்றுப்பெருக்கு உயர்வாகக் காணப்படுகின்றது. எரிமலை சீற்றங்கள், புவிநடுக்கங்கள், பனிப்பாறை உருகுதல் போன்றவற்றாலும் கடல் நீரில் அலைகள் உண்டாகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்வேறு மென்பொருள்கள்....

நமது கணினித்திரை திறக்கப்பட்டதும் தொடக்கத்திற்குச் சென்றால் பல்வேறு மென்பொருட்களை அங்கே காணக்கூடியதாக இருக்கும். அவற்றில் அமெரிக்காவின் 'அடோப்' நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மென்பொருட்கள் பல இருப்பதை நாம் அறியலாம். இவ்வாறான மென்பொருட்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்கக்கூடியன. இணையத் தளத்திலிருந்து இவற்றைப் பற்றிய விபரங்களை அறியவும், மென்பொருளைப் பதிவிறக்கிக் கொள்ளவும் முடியும்.













அடோப் இமேஜ் ரெடி என்ற மென்பொருள் மூலமாக இணையத்தள போட்டோ பைல்களை நிறுவலாம். இம்மென்பொருள் போட்டோசொப்பின் பகுதிகளை உள்ளடக்கியுள்ளமையால் புகைப்படங்களைத் தரமானதாகத் தயாரித்து ஃபைல் அளவினைச் சுருக்கிப் பதிவு செய்துகொள்ள முடியும். இதன் மூலம் தயாரிக்கப்படும் இணையத் தளங்கள் தரம் வாய்ந்ததாக இருப்பதோடு, வேகமாக பதிவிறக்கிக் கொள்ளக்கூடியதாகவும் இருக்கும்.

அடோப் போட்டோசொப் என்பது நசிந்த புகைப்படங்களைத் தரமானதாகவும், அச்சகத் துறைக்கான வண்ணப் பிரிப்புகளை மேற்கொள்ளவும் உதவக்கூடிய மென்பொருளாகும். இதன் புதிய பதிப்பில் பல புதுயுக்திகள் சேர்ந்துள்ளன.

அடோப் பேஜ்மேக்கர் பொதுவாக, அச்சகங்களின் வேலைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. குறிப்பாக, நூல்களை பக்கங்களாக உருவாக்கிக்கொள்வதற்கான சகல வசதிகளும் பேஜ்மேக்கர்மூலம் செய்துகொள்ளலாம்.

'அடோப் பொன்ட்ஸ்' என்ற மென்பொருளின்மூலம் உலகத் தரம்வாய்ந்த 2300 க்கும் மேற்பட்ட ஆங்கில எழுத்துருவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

செம்மைத்துளியான்

## விரலில் அணியும் மோதிர மவுஸ்

'கணினி மவுஸ்' மற்றுமொரு வடிவத்தைப் பெற்று அறிமுகமாகியுள்ளது. இவ்வாறு புதிதாக அறிமுகமாகியுள்ள 'மவுஸ்' ஆனது 'ஜீனியஸ் ரிங் மவுஸ்' (Genius Ring mouse) என்று அழைக்கப்படுகின்றது. இது விரல்களில் அணிகின்ற மோதிரத்தைப் போன்ற வடிவில் அமைத்துள்ளதால் இதற்கு 'ரிங் மவுஸ்' என்று பெயரிடப்பட்டுள்ளது.

இந்த 'ரிங் மவுஸை' விரலில் அணிந்தவாறு இன்னொரு விரலினால் இதனை ஸ்பரிசிக்கும்போது, கணினியை இயக்க முடியும். குறிப்பாக, 'லெப்டொப்' கணினியின் டிரக்பேடை (Track pad) தொடுகை புரிவது போலவே இதுவும் தொடுகைமூலம் செயற்படுகின்றது.

'Touch control technology' தொழில்நுட்பத்தைக் கொண்டுள்ள இது 1000 dpi நுணுக்கத்தைக் கொண்டதாகும். எந்தவொரு 'வயர்' (கம்பி) தொடர்புகளுமின்றி செயற்படுகின்ற மேற்படி 'ரிங் மவுஸ்' கணினியிலிருந்து 30 அடி தூரத்திலிருந்தும் செயற்படுத்தக் கூடியதாகும். இதற்கான பற்றரியானது USB தொடர்பினூடாக செயற்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.




# புதிய இணைய சேவைகள்

★ whois.net என்ற இணையத் தளத்தில் உள்ள சேர்ச்பொக்ஸில் ஏதேனும் இணையமொன்றின் விபரங்களை உள்ளேந்தி மேலும் முன்செல்லுமாறு கிளிக் செய்தால் குறித்த இணையத் தளத்தை நடத்திச் செல்கின்றவர்களின் விபரங்கள் மற்றும் அதன் தொழில்நுட்ப விபரங்களையும் அறிந்துகொள்ள முடியும்.




★ ★ ★

★ reddodo.com என்ற இணையத் தளத்தில் பெறக்கூடிய டெம்ப்பிளேட்ஸில் நாம் விரும்பியவாறு மாற்றங்களைச் செய்து கையடக்கத் தொலைபேசிகளில் அவற்றை டவுன்லோர்ட் செய்துகொள்ள முடியும்.



★ ★ ★

★ gametop.com என்ற இணையத் தளத்தில் கணினி மற்றும் கைப் பேசிகளுக்கான விளையாட்டுக்களை (games) டவுன்லோர்ட் செய்துகொள்ள முடியும். அத்துடன், ஒன்லைன் கேம்ஸ்களையும் இலவசமாகப் பெற்றுக்கொள்ள முடியும்.






இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2011, ஜூலை மாதம் 13 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday July 13, 2011.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org